# வைப்பகம்

2024 ஏப்பிறல் - யூன்  மலர் 8  இதழ் 04 - 06

அறிவுத் தேடலின் மையம்

02 ஊழியர் செயலாற்ற மதிப்பீட்டில் காணப்படும் பொதுவான தரமிடல் வழுக்கள்

11 தடைகளை உடைத்தல், பாலங்களை அமைத்தல்: உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவதன் சிக்கலான தன்மையினை உபாய முறையில் வழிநடத்திச் செல்லல்

19 காலநிலை மாற்றம்: நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளும் விளைவுகளும்

29 பாரியளவிலான நிதியியல் நெருக்கடிக்கான பொறுப்பை ஏற்பது யார்? ஐக்கிய இராச்சிய வங்கியை மீட்டெடுத்தல் தொடர்பான விசேட வலியுறுத்துகையை நோக்கி

ரூ. 80/-
ஆண்டுச் சந்தா
(தபால் கட்டணம்
உட்பட) (ரூ.500)

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் எழுத்தாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை

இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்



# ஊழியர் செயலாற்ற மதிப்பீட்டில் காணப்படும் பொதுவான தரமிடல் வழுக்கள்

எச்.பீ.எஸ். தேசப்பிரிய
மூத்த துணைப் பணிப்பாளர்
மனித வளங்கள் திணைக்களம்

## 1. அறிமுகம்

ஊழியர் செயலாற்ற மதிப்பீடு என்பது ஊழியரின் வெளியீட்டினைத் திட்டமிடல், முகாமைப்படுத்தல், மதிப்பிடல் மற்றும் கண்காணித்தல் செய்முறையொன்றாக இருப்பதனால் இது மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பில் மிகப் பரந்ததும் சிக்கல் வாய்ந்ததுமான தொழிற்பாடாகக் காணப்படுகின்றது. செயலாற்ற மதிப்பீட்டினைச் சரியான முறையில் மேற்கொள்வதற்கு தொடர்ச்சியான கண்காணிப்பும் பொருத்தமான பின்னூட்டலும் அவசியமாகும். செயலாற்ற மதிப்பீடானது, ஊழியர் செயலாற்றம் பற்றிய மீளாய்வு, நிறுவன ரீதியான குறிக்கோள்கள் மற்றும் முக்கிய பெறுபேறுகளைப் பூர்த்தி செய்வதற்கான செயலாற்ற நியமங்கள் உள்ளிட்ட முகாமைத்துவ நடைமுறைகளை ஒருங்கிணைக்கிறது.

## 2. பின்னணி

ஊழியர் செயலாற்ற மதிப்பீடென்பது, வெகுமதிகள், பதவி உயர்வுகள் மற்றும் அபிவிருத்தி பின்னூட்டல் என்பனவற்றிற்கான அடிப்படையினை வழங்குகின்ற நிறுவன ரீதியான முகாமைத்துவத்தின் மிக இன்றியமையாத அம்சமாகும் என சிறிதேவியும் மற்றையவர்களும் (2010) குறிப்பிடுகின்றனர். எனினும், இச்செய்முறையானது காத்திரமான தன்மை மற்றும் நியாயமான தன்மைகளை விட்டுக்கொடுக்கின்ற பல்வேறு தரமிடல் வழுக்களினால் அடிக்கடி பாதிக்கப்படுகிறது. இக்கட்டுரையானது செயலாற்ற மதிப்பீட்டு முறைகளில் எதிர்நோக்கப்படும் பொதுவான தரமிடல் வழுக்களைக் கண்டறிவதனையும் அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களைப் பரீட்சிப்பதனையும் அவற்றின் தாக்கத்தினை தணிப்பதற்கான உபாயங்களை முன்மொழிவதனையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இவ்வழுக்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நிறுவனங்கள் அவற்றினது செயலாற்ற மதிப்பீட்டு முறைமைகளின் துல்லியமான தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் உயர்த்த முடியும் என்பதுடன் மேம்பட்ட ஊழியர்களின் திருப்திக்கும் நிறுவனங்களின் காத்திரமான தன்மைக்கும் வழிவகுக்கும்.

## 3. ஊழியர் செயலாற்ற மதிப்பீட்டின் குறிக்கோள்கள்

நிறுவனங்களில் காணப்படும் செயலாற்ற மதிப்பீட்டின் பிரதான குறிக்கோள் ஊழியர்களின் செயலாற்றத்தினை அதிகரிப்பதேயாகும். இக்குறிக்கோளினை மூன்று முக்கிய பொறிமுறைகளினூடாக மேற்கொள்ள முடியும்.

i. செயலாற்ற மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட தகவல்களை சம்பள அதிகரிப்பு, பதவி உயர்வு அல்லது நீக்கிவிடுதல் போன்ற நிறுவன ரீதியான வெகுமதிகள் அல்லது தண்டனைகளுக்கான மதிப்பீட்டுச் செயலாற்றத்தினை இணைக்கின்ற நிருவாகத் தீர்மானங்களுக்குப் பயன்படுத்த முடியும்.

ii. செயலாற்ற மதிப்பீட்டுச் செய்முறையானது, மதிப்பீடு செய்யப்பட்ட ஊழியர்களின் செயலாற்ற

பின்னூட்டத்தினை வழங்குவதுடன் தொடர்புபடுவதனால் (அதாவது செயலாற்ற மட்டம் தொடர்பான தகவல்கள்) அவர்களது செயலாற்ற உபாயங்களை, விரும்பத்தக்க செயலாற்றத்திற்குப் பொருந்தத்தக்க விதத்தில் சீராக்கிக் கொள்வதற்கு அவர்களை அனுமதிக்கிறது் அத்துடன்

iii. செயலாற்ற மதிப்பீடென்பது, ஊழியர்கள் அளவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்ற விடயம் அவர்களுடைய விழிப்புணர்வினை அதிகரிக்கின்றதொரு செய்முறையாகக் காணப்படுகிறது.


இதன்படி, ஊழியர் செயலாற்ற மதிப்பீடானது, தனிப்பட்டவர்களின் பங்களிப்புக்களை மதிப்பிடுகின்ற, பின்னூட்டல்களை வழங்குகின்ற, நிறுவன ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ள வசதியளிக்கின்ற அடிப்படைக் கருவியாகச் செயற்படுகின்றது. எனினும், செயலாற்ற தரமிடலின் துல்லியமான தன்மையினையும் நேர்மையும் பல்வேறுபட்ட பாரபட்சங்கள் மற்றும் மதிப்பீட்டுச் செய்முறையில் இயல்பாகவே பின்னிப்பிணைந்து காணப்படும் வழுக்கள் என்பனவற்றுடன் அடிக்கடி சமரசம் செய்து கொள்ளப்படுகின்றன. இத்தரமிடல் வழுக்கள் ஊழியர்களது உண்மையான செயலாற்றம் தொடர்பான அறிவுபூர்வ தன்மைகளைத் திரிபுபடுத்திவிடுவது மட்டுமன்றி, மதிப்பீட்டு முறைமை முழுவதினதும் நம்பகத்தன்மையினையும் காத்திரமான தன்மையினையும் குறைத்துவிடுகிறது. இக்கட்டுரையானது செயலாற்ற மதிப்பீட்டில் எதிர்நோக்கப்படுகின்ற பொதுவான தரமிடல் வழுக்களைப் பரீட்சிப்புச் செய்து அவற்றின் அடிப்படைப் பொறிமுறைகளை விளக்குவதுடன் அவற்றின் மோசமான தாக்கங்களைத் தணிப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான உபாயங்களையும் தெரிவிக்கின்றது.

## 4. செயலாற்ற மதிப்பீடுகளின் வேறுபட்ட வகைகள்

மனித வளங்கள் முகாமைத்துவ துறையில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியின் காரணமாக செயலாற்ற மதிப்பீட்டுச் செய்முறைகளுக்காக கடந்த பல தசாப்தங்களாக அநேக நடைமுறைகள்/ முறையியல்கள்/ பயிற்சி முறைகள் என்பன பின்பற்றப்பட்டும் அறிமுகப்படுத்தப்பட்டும் வந்திருக்கின்றன. இச்செய்முறைகள் உண்மையில் ஊழியர்களின் செயலாற்றத்தினை மதிப்பிடுவதுடனும் அவர்களது வேலை பற்றிய தரம் மற்றும் திறன் பற்றிய அவர்களது பின்னூட்டல்களை வழங்குவதுடனும் தொடர்புபட்டனவாகக் காணப்படுகின்றன.

### 4.1 தரமிடுகின்ற முறை

இம்முறையானது ஊழியர்களை மற்றைய ஒவ்வொருவரினதும் தொடர்பான செயலாற்றத்துடன் ஒப்பிட்டு அதன் அடிப்படையில் இவர்களைத் தரமிடுவதுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. கோட்பாடு ரீதியாக இது மிக எளிதானதாகக் காணப்படுகின்ற அதேவேளையில், முழு ஊழியர்களிடையேயும் தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் பண்புகளை நேரடியாக ஒப்பிடுவது என்பது நடைமுறையில் சவால் மிகுந்ததொன்றாக மாறியிருக்கிறது. மேலும்,



குழுமப்படுத்தும் பொழுது தனிப்பட்ட ஒருவருக்கான தரப்படுத்தலை மிகத் துல்லியமாக வழங்குதல் என்பது மேலும் சிக்கலாக மாறுகின்றது.

### 4.2 வலிந்த பங்கீட்டு முறை

இம்முறையில் தரமிடுவோர் ஊழியர்களின் வெவ்வேறுபட்ட வகையினருக்கு வெவ்வேறுபட்ட சதவீதங்களை ஒதுக்குகின்றனர். உதாரணமாக 15 சதவீதம் அதிவிசேட செயலாற்றுநர்களுக்கு, 20 சதவீதம் மிகச் சிறந்த செயலாற்றுநர்களுக்கு, 30 சதவீதம் சராசரி செயலாற்றுநர்களுக்கு, 20 சதவீதம் திருப்திகரமான செயலாற்றுநர்களுக்கு 15 சதவீதம் மோசமான செயலாற்றுநர்களுக்கு. இம்முறை தொடர்பான நேர்மறையான சிந்தனை யாதெனில் தரமிடுபவரின் தொடர்பான தனிப்பட்ட அக உணர்வுகள் இல்லாதொழிக்கப்படுகின்றன. அண்மைய காலங்களில், பாரபட்சம் என்பது பாரிய பிரச்சனையாக மாறியிருப்பது அவதானிக்கப்பட்டிருப்பதுடன் அத்தகைய பிரச்சனை இம்முறையில் பெருமளவிற்கு நீக்கப்பட்டிருக்கின்றதெனினும் தரமிடுவது பிரச்சனைகளை உருவாக்குகிறது. ஊழியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட தரங்களை விட தமது இயலாற்றலும் உற்பத்தித்திறனும் அதிகமானது எனத் தம்மைத் தாமாகவே கருதிக் கொள்கின்ற ஊழியர்களின் செயலூக்கம் குன்றிப்போவதாக உணர்வதுடன் பின்னர் வேலை செய்ய தயக்கம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

### 4.3 நெருக்கடி நிகழ்வுத் தொழில்நுணுக்கம்

இம்முறையில், முகாமையாளரினால் ஆவணத்தில் பதிவுசெய்யப்பட்ட சில நெருக்கடி நிகழ்வுகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஊழியரும் மதிப்பீடு செய்யப்படுகின்றனர். முகாமையாளர் ஒவ்வொரு ஊழியரின் பொருட்டும் சாதகமான மற்றும் பாதகமான நிகழ்வுகள் இரண்டினதும் விபரங்களைக் கொண்ட பதிவுப் புத்தகமொன்றினைப் பேணுவார். செயலாற்ற மதிப்பிடலின் போது இப்பதிவேடுகள் மீளாய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்படும். எனினும், இதன் மதிப்பு பெறுபேறு தரமிடுபவரின் கண்ணோட்டத்தின் செல்வாக்கிற்கு உட்படுகிறது என்பதனைக் கவனிப்பது நன்மைபயக்கும். இது, மதிப்பீட்டுச் செய்முறைக்குள் தனிப்பட்ட அகநிலை சார்ந்த உணர்விற்கு ஆட்படும் தன்மைகளை அறிமுகப்படுத்தக்கூடும்.

### 4.4 பரிசோதனைப் பட்டியல்

இம்முறையில், சில கூற்றுக்கள் விபரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கூற்றும் இதனுடன் இணைக்கப்பட்ட பெறுமானமொன்றினைக் கொண்டிருக்கிறது. கூற்றுக்களுக்கெதிராக வேறுபட்ட நிறைகள் வழங்கப்படுகின்றன. பரிசோதனைப் பட்டியல் ஒவ்வொரு வேலைக்கும் தயாரிக்கப்படுவதுடன் பெறுமானங்கள் இதனுடன் இணைக்கப்படுகிறது. இது செயலாற்றத்தினை மதிப்பிடுவதற்கு பரந்தளவிற்குப் பயன்படுத்தப்படுகின்ற முறையாக இருக்கின்ற போதும், இது கூடுதலான செலவுடையதாக இருப்பதுடன் உயர்ந்தளவு தனிப்பட்ட அகநிலை சார்ந்த மன உணர்வுப் பிரச்சனைகளையும் கொண்டிருக்கிறது.

### 4.5 குறிக்கோள்களின் படியான முகாமைத்துவம்

இம்முறையானது, பகிரப்பட்ட இலக்குகளை எய்துவதற்கு மேலேயுள்ளவர்கள் மற்றும் கீழேயுள்ளவர்களிடையேயான ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு முயற்சிகளுடன் தொடர்புபட்டதாக காணப்படுகிறது. முகாமையாளரும் ஊழியரும் அவர்களது இலக்குகளுடன் இணைக்கப்பட்ட இலக்குகளை நிறுவுவதற்கு ஒத்துழைக்கின்றனர். அவர்கள் முக்கிய பெறுபேற்றுத் துறைகளை அடையாளம் காண்பதுடன் தரம், நேரம் மற்றும் உற்பத்தியாக்கம் ஆகிய நியதிகளில் செயலாற்ற நியமங்களையும் வரைவிலக்கணம் செய்கின்றனர். இக்கட்டமைப்பிற்குள் திணைக்களத் தலைவர்களும் உச்சமட்ட முகாமைத்துவத்தினரும் திணைக்கள ரீதியாக வேலைத் திட்டங்களை வடிவமைப்பதற்கு பங்களிக்கின்றனர். அதன் பின்னர் திணைக்களத் தலைவர் தொடர்பான திணைக்களத்தின் ஊழியர்களுக்கு திணைக்களத்தின் இலக்குகள் பற்றி அறிவிப்பார். திணைக்களத் தலைவர் அவதானிக்கப்பட்ட செயலாற்றத்திற்கும் விரும்பப்பட்ட செயலாற்றத்திற்குமிடையிலான இடைவெளியினை அவதானிக்கின்றார். திணைக்களம் மதிப்பீட்டு நேர்காணலை மேற்கொள்வதுடன் ஒட்டுமொத்த செயலாற்றம் தொடர்பான பின்னூட்டலினையும் வழங்குகிறது. குறிக்கோள்களின்படியான முகாமைத்துவம் அணிப்படுத்தப்படுவதுடன் நிறுவன ரீதியான மற்றும் தனிப்பட்ட இலக்குகளுடன் இணைக்கப்படுகிறது. இதனை இலகுவாகப் பிரயோகிக்க முடியும். இது, உயர்ந்த தார்மீகம் மற்றும் நம்பிக்கைக்கு உத்வேகமளிப்பதுடன் தனிப்பட்ட காரணிகள் தவிர்ந்த பெறுபேறுகளையும் அளவிடுகின்றது. இது சிக்கலானதும் நேரமெடுக்கும் செய்முறையாகவும் காணப்படுகின்றது. இது மட்டுமன்றி, இது செலவுமிக்க நீண்ட செய்முறையொன்றுமாகும்.

### 4.6 மதிப்பீட்டு மையங்கள்

மதிப்பீட்டு மையமொன்றின் இன்றியமையாத கூறு யாதெனில் செயலாற்ற மதிப்பீடுகளாகும். பல்வேறுபட்ட பயிற்சி முறைகள், உருவகப்படுத்தல்கள் மற்றும் அவதானிப்புக்களூடாக தனிப்பட்டவர்கள், அவர்களது தகுதிகள், தேர்ச்சிகள் மற்றும் அவர்களது வகிபாகம் மற்றும் நிறுவன ரீதியான குறிக்கோள்கள் தொடர்பான அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### 4.7 நடத்தை ரீதியான நிலைநிறுத்தப்பட்ட தரமிடல் அளவு

குறித்துரைக்கப்பட்ட நடத்தைகளை கூட்டிணைக்கின்ற தரமிடல் அளவுகளைப் பயன்படுத்தி செயலாற்றம் மதிப்பிடப்படுகிறது. மனித வள நிபுணர்கள் இந்நடத்தைகளின் வினைத்திறனை அல்லது வினைத்திறனற்ற தன்மையினை மதிப்பீடு செய்வதுடன் அளவுகளின் அடிப்படையில் நெருக்கடி நிகழ்வுகளையும் தரமிடுகின்றனர். நடத்தை சார்ந்த நிலைநிறுத்தப்பட்ட தரமிடல் அளவுகள் வேலை நியமங்களுடன் செயலாற்ற மதிப்பீட்டினை அணிப்படுத்துகின்ற ஒவ்வொரு பரிணாமத்திற்குமாகப் பயன்படுத்தப்படுகின்றது. நடத்தை சார்ந்த நிலைநிறுத்தப்பட்ட தரமிடல் அளவுகள் செயலாற்றத்தினை துல்லியமாக அளவிடுகின்ற வேளையில் அவற்றைத் தயாரிப்பது நேரமெடுக்குமொன்றாக இருப்பதுடன் வேறுபட்ட வேலை வகிபாகங்களுக்காக வேறுபட்ட அளவுகளைத் தேவைப்படுத்துகின்றன.

### 4.8 360 பாகை மதிப்பீடு

360 பாகை மதிப்பீடென்பது பல் தரமிடல் அணுகுமுறையொன்றாகும். பல் தரமிடல்கள் கூடுதலானளவிற்கு நம்பகமான தகவல்களை வழங்குகின்றன. பல் பின்னூட்டல் எடுக்கப்படுமிடத்து இது ஒரு அணுகுமுறையாக இருக்கின்றதெனினும் இது மிகுந்த நேரமெடுக்கும் செலவுமிக்கதொன்றாகக் காணப்படுகின்றது. இவ்வணுகுமுறையில் பல்வேறு பிரச்சனைகள் தொடர்புபட்டுக் காணப்படுவதுடன் இரகசியத்தன்மையிலும் இடர்நேர்வு காணப்படுகின்றது. முன்னர், நிறுவனம் பயன்படுத்திய தனியொரு மூலத்திலிருந்து அறிக்கைகளைப் பெறும் முறையில் ஊழியரொருவரின் செயலாற்றத்தினை மதிப்பிடுகையில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் எழக்கூடுமென்பதனால் நம்பகத்தன்மையற்றதாகக் காணப்படுகிறது. 360 பாகையின்படி, ஊழியர்களின் தகவல்கள் பல்வேறுபட்ட மூலங்களினால் திரட்டப்படுவதுடன் இவை கீழே காட்டப்படுகின்றன:

i. முகாமையாளர்
ii. ஒப்பானவர்கள்
iii. சுயமதிப்பீடு
iv. வாடிக்கையாளர்கள்
v. குழு மதிப்பீடு

## 5. செயலாற்ற மதிப்பீட்டின் பொதுவான தரமிடல் வழுக்கள்

செயலாற்ற மதிப்பீடானது உண்மையில் முழுமையான துல்லியத்தன்மையினையும் இலக்கினையும் கொண்டதாக இருப்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எனினும், நடைமுறையில் செயலாற்ற மதிப்பீட்டில் இந்நியமங்கள் அடிக்கடி பற்றாக்குறையாகவே காணப்படுகின்றமையானது சாத்தியமான தரமிடல் வழுக்களுக்கு வழிவகுக்கின்றது. இவ்வழுக்களைக் கட்டுப்படுத்தாதுவிடின் அது செயலாற்ற மதிப்பீடுகளின் துல்லியமான தன்மையினையும் நேர்மையினையும் குறிப்பிடத்தக்களவிற்கு பாதிக்க முடியும். பொதுவான பல தரமிடல் வழுக்கள் ஊழியரொருவரின் செயலாற்ற மதிப்பீட்டின் போது ஏற்படக்கூடும். இவ்வழுக்களில் காணப்படும் பரவலான மூலங்கள் சில கீழே தரப்படுகின்றன.

### 5.1. பொதுவான தரமிடல் வழுக்கள்

#### 5.1.1. ஒளிவட்டத் தாக்கம்

ஒளிவட்டத் தாக்கம் என்பது, உண்மையில் செயலாற்ற மதிப்பீடுகளில் காணப்படும் மிகப் பொதுவான வழுக்களில் ஒன்றாகும். ஊழியரொருவரின் குறிப்பிட்ட தகைமை அல்லது பண்புகள் ஒட்டுமொத்த மதிப்பீட்டில் செல்வாக்கினைச் செலுத்தும் போது அவர்களது செயலாற்றத்தின் மற்றைய அம்சங்கள் மறைக்கப்படுகின்றன. உதாரணமாக ஊழியரொருவர் மென்மையாகப் பேசக்கூடியவராக இருப்பின் இப்பண்பினை ஏக அடிப்படையாகக் கொண்டு செயலாற்றம் மற்றும் உற்பத்தியாக்கத்தின் மீது உயர்ந்த தரமிடல் வழங்கப்படக்கூடும். இது, மற்றைய ஊழியர்கள் நியாயமற்ற விதத்தில் பாதிக்கப்படுவதற்கான சாத்தியங்களுக்கு வழிவகுக்கும்.

இன்னொரு உதாரணம் ஊழியரொருவர் விற்பனை இலக்குகளைத் தொடர்ச்சியாகப் பூர்த்திசெய்யும் போது அல்லது விஞ்சும் பொழுது இடம்பெறுகிறது. அவர்களது முகாமையாளர், மற்றைய துறைகளில் அவர்களது

செயலாற்றத்தினை முழுமையாக மதிப்பீடு செய்யாமல் மற்றையவர்களைப் பாதிக்கும் விதத்தில் உயர்ந்த தரத்தினை அவர்களுக்கு வழங்க விரும்பக்கூடும். இப்பாரபட்சம் மதிப்பீட்டாளரின் தீர்ப்பில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடும் என்பதுடன் ஊழியரின் ஒட்டுமொத்த செயலாற்றத்தினை துல்லியமாகப் பிரதிபலிக்காத விஞ்சிய தரமிடலொன்று வழங்க வழிவகுக்கும். ஒளிவட்டத் தாக்கத்தினை அடையாளம் கண்டு அதனைத் தணிப்பது நியாயமானதும் குறிக்கோள் சார்ந்ததுமான செயலாற்ற மதிப்பீடுகளை உறுதிப்படுத்த மிக முக்கியமானதாகும்.

### 5.1.2. கொம்புத் தாக்கம்

கொம்புத் தாக்கம் என்பது உண்மையில் செயலாற்ற மதிப்பீடுகளில் காணப்படும் பொதுவான வழுவொன்றாகும். ஊழியரொருவரின் எதிர்மறையான பண்பொன்றின் அல்லது அம்சமொன்றின் நடத்தை ஒட்டுமொத்த மதிப்பீட்டின் மீது செல்வாக்கினை ஏற்படுத்தும் போது நிகழ்வதுடன் அவர்களின் உண்மையான செயலாற்றத்தினையும் மறைத்து விடுகின்றது. உதாரணமாக, ஊழியரொருவர் கடும்தொனியில் பேசுபவராக இருப்பின், அவரது பணியில் உயர்ந்த செயலாற்றத்தினை எடுத்துக்காட்டுபவராக இருக்கின்ற போதும் அவர் செயலாற்றத்திலும் உற்பத்தித்திறனிலும் குறைந்த தரத்தினையே பெறுவார்.

மதிப்பீடுகள் நடத்தை சார்ந்த விடயங்களில் மாத்திரம் தங்கியிராமல் குறிக்கோள் சார்ந்த செயலாற்ற அளவைமுறையினை அடிப்படையாகக் கொண்டிருப்பது முக்கியமானதாகும். எதிர்மறைப் பண்புகளில் மாத்திரம் கவனம் செலுத்துவது ஊழியர்களை நியாயமற்ற விதத்தில் தண்டிப்பதாக அமைவதுடன் அது நிறுவனத்திற்கான அவர்களது பங்களிப்பு தொடர்பில் துல்லியமற்ற மதிப்பீடுகளுக்கும் இட்டுச்செல்லும். ஆகவே, தரமிடல்கள், ஊழியரொருவரின் உண்மையான செயலாற்றத்தின் அனைத்தையுமுள்ளடக்கியதும் நியாயமானதுமான அடிப்படையொன்றில் இடம்பெறுவதனை உறுதிப்படுத்துவதன் மூலம் கொம்புத் தாக்கத்தினை அடையாளம் கண்டு தணிப்பது மதிப்பீட்டாளர்களுக்கு மிக முக்கியமானதாகும்.

### 5.1.3. மையப் போக்கு

மதிப்பீட்டாளர்கள், ஊழியர்களின் உண்மையான செயலாற்றத்தினைக் கருத்திற்கொள்ளாமல் அனைத்து ஊழியர்களையும் சராசரியாக தனியொரு புள்ளிவிபர முறையில் தரமிடும் போது இம்மையப் போக்கு வழுக்கள் ஏற்படுகின்றன. கூடுதலான அளவுமுறைகளில் தரமிடல்களை வழங்க இவ்வாறு தயங்குவது நியாயமற்ற சராசரி மதிப்பீடுகளை ஏற்படுத்துவதுடன் இது விதிவிலக்கான செயலாற்றத்தினை அங்கீகரிப்பதனை அல்லது மோசமான செயலாற்றத்தினை போதுமானளவிற்கு கட்டுப்படுத்துவதனை இயலாமல் செய்துவிடுகிறது.

எடுத்துக்காட்டாக, ஊழியரொருவர் மிகச் சிறந்த செயலாற்றத்தினை எடுத்துக்காட்டியிருப்பினும் கூட மதிப்பீட்டாளர் அது தொடர்பில் மிகச் சிறந்த தரமிடலை வழங்குவதற்குத் தயங்கி அதற்குப் பதிலாக அவர்களுக்கு சராசரி தரமிடலை வழங்குமிடத்து அது மையப் போக்கு வழுவினைப் பிரதிபலிக்கிறது. இதேபோன்று, ஊழியரொருவரின் செயலாற்றம் தொடர்ச்சியாக மோசமானதாக அமைந்த போதும் அவர் மோசமான தரமிடலுக்குப் பதிலாக சராசரி தரமிடலைப் பெறுவாராயின் இதுவும் மையப் போக்கு வழுவினை எடுத்துக்காட்டும்.

உயர்ந்த மற்றும் தாழ்ந்த செயலாற்றத்தினைக் கொண்டவர்களிடையேயான வேறுபாட்டினைக் கண்டறியத் தவறுவதன் மூலம் ஏற்படும் இவ்வழுவானது செயலாற்ற மதிப்பீட்டின் காத்திரமான தன்மையினைக் குறைத்து விடுவதன் மூலம் அடையாளம் காணுதல், மேம்படுத்தல், பொருத்தமான பின்னூட்டல் என்பனவற்றிற்கான வாய்ப்புக்களுக்கும் முட்டுக்கட்டையாக அமைகிறது.

### 5.1.4. கண்டிப்பான தரமிடல்

ஊழியரொருவரின் உண்மையான செயலாற்றத்திற்கு வழங்கப்பட வேண்டியதிலும் பார்க்கக் குறைவான தரமிடலை மதிப்பீட்டாளர் தொடர்ச்சியாக வழங்குகின்ற போது கண்டிப்பான தரமிடல் வழுக்கள் ஏற்படுகின்றன. மிகச் சிறந்த நேர்த்தியான செயலாற்றத்தினை அடையாளம் கண்டு வெகுமதி வழங்குவதற்குப் பதிலாக இத்தரமிடுவோர் ஊழியரின் சாதனைகளைக் கருத்திற்கொள்ளாமல் சராசரி அல்லது அதற்கும் குறைவான தரமிடலை வழங்குவதில் நாட்டம் கொள்கின்றனர்.

உதாரணமாக, ஊழியரொருவர் தொடர்ச்சியாக மிகச் சிறந்த செயலாற்றத்தினை எடுத்துக்காட்டியிருப்பினும், மதிப்பீட்டாளர் அவர்களது மதிப்பீட்டுப் பிரமாணத்தில் காணப்படும் கண்டிப்பான தன்மை அல்லது நெகிழ்ச்சியற்ற தன்மையின் காரணமாக அவர்களுக்குச் சராசரி தரமிடலை

வழங்கும் போது இது கடுமையான தரமிடல் வழுக்களைப் பிரதிபலிக்கிறது. அதேபோன்று, ஊழியர்களின் செயலாற்றம் சராசரி தரமிடலுக்கான பிரமாணத்தினைப் பூர்த்தி செய்திருக்குமிடத்து மதிப்பீட்டாளர் அளவுக்கதிகமான உயர் நியமங்களின் காரணமாக மோசமான தரமிடலை அவர்களுக்கு வழங்குவாராயின் இதுவும் இவ்வழுக்களை எடுத்துக்காட்டும்.

கண்டிப்பான தரமிடல் ஊழியரின் தார்மீகம், செயலூக்கம் மற்றும் எதிர்த்துநிற்கும் தன்மை என்பன மீது தீங்குபயக்கும் தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடும். ஊழியர்கள் தாம் பெறுவதற்கு தகைமையுடைய தரமிடலிலும் பார்க்க குறைந்த தரமிடலைத் தொடர்ச்சியாகப் பெறுகின்றவிடத்து அவர்கள் செயலூக்கம் குன்றியவர்களாகவும் வேலைகளிலெதிலும் ஈடுபாடுகாட்டாதவர்களாகவும் மாறிவிடுவதனால், அது உற்பத்தியாக்கமும் தொழில் திருப்தியும் குறைவடைய வழிவகுக்கிறது. ஆகவே, மதிப்பீட்டாளர்கள், ஊழியர்களின் உண்மையான செயலாற்றத்தினை துல்லியமாகப் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் அவர்கள் குறிக்கோளுடனும் நேர்மையான விதத்திலும் தொடர்ந்தும் நடந்து கொள்வது முக்கியமானதாகும்.

### 5.1.5. கடுமையற்ற தரமிடல்

சில தரமிடலாளர்கள் இயல்பாகவே தாராள மனம் கொண்டவர்களாக இருப்பர். இவ்வழுவானது கண்டிப்பான தரமிடலுக்கு எதிரானதாகும். கடுமையற்ற தரமிடல் வழுவானது, உண்மையான செயலாற்றம் அல்லது மதிப்பிடப்பட்ட தரத்தின் மூலம் நியாயப்படுத்தப்பட்டதிலும் பார்க்க உயர்ந்த தரமிடலைத் தொடர்ச்சியாக தரமிடுபவர்கள் வழங்கும் போது ஏற்படுகிறது. துல்லியமான மதிப்பீடுகளை வழங்குவதற்குப் பதிலாக கடுமையற்ற தரமிடலாளர்கள் சராசரியான அல்லது சராசரிக்கும் குறைவான செயலாற்றத்தினைக் கொண்டவர்களுக்கு அடிக்கடி மிகச் சிறந்த தரமிடலை வழங்கி தரமிடலை பெருக்கச் செய்வதற்கு முனைகின்றனர்.

### 5.1.6. அந்தஸ்தின் தாக்கம்

செயலாற்ற மதிப்பீட்டில் "அந்தஸ்தின் தாக்கம்" என்பது தனிப்பட்டவரின் செயலாற்ற மதிப்பீட்டின் மீது தரமிடுபவர் செல்வாக்கினைச் செலுத்துவதற்கு நிறுவனமொன்றிற்குள்ளே அத்தனிப்பட்டவரின் அந்தஸ்து அல்லது பதவி தொடர்பாக அத்தரமிடுபவரின் விருப்பம் சார்ந்த கண்ணோட்டத்தினைக் குறிக்கிறது. இப்பாரபட்சமான தன்மையானது அவர்களது உண்மையான செயலாற்றத்தினைக் கருத்திற்கொள்ளாது உயர்ந்த அந்தஸ்து அல்லது அதிகாரத்தினைக் கொண்டிருக்கும் தனிப்பட்டவர்களின் கண்ணோட்டத்திற்கான வீக்கத் தரமிடல்களுக்கு இட்டுச்செல்ல முடியும். மாறாக, குறைந்த அந்தஸ்துடன் கூடிய தனிப்பட்டவர்கள் அவர்களது செயலாற்றத் திறமைகள் உயர்ந்த புள்ளிகளைப் பெற்றிருந்தாலும் கூட குறைந்த தரமிடலையே பெறுபவர்.

இவ்வழு, வேலைச் செயலாற்றத்துடன் தொடர்புபடாத காரணிகளை அடிப்படையாகக் கொண்ட அக எண்ணம் சார்ந்த தீர்ப்புக்களை அறிமுகப்படுத்துவதனால் அது செயலாற்ற மதிப்பீடுகளின் நேர்மை மற்றும் துல்லியமான தன்மையினைக் குறைத்துவிடக்கூடும். தனிப்பட்டவர்களின் உண்மையான பங்களிப்புக்களை அல்லது இயலாற்றல்களைக் கருத்திற்கொள்ளாது உயர் அந்தஸ்தினைக் கொண்ட தனிப்பட்டவர்களுக்கும் அநுகூலத் தன்மையினையும் குறைந்த அந்தஸ்தினைக் கொண்டவர்கள் எவரோ அவர்களுக்குப் பிரதிகூலங்களையும் வழங்குவதன் மூலம் நிறுவனத்திற்குள் சமத்துவமற்ற தன்மை தொடர்ந்தும் நிலைபெற்றிருக்கும்.

### 5.1.7. கசியும் தாக்கம்

கடந்த கால மதிப்பீட்டு தரமிடல் தொடர்ந்துவரும் தரமிடல்களில் செல்வாக்கினைச் செலுத்தும் போது அது கசியும் தாக்கத்தினைக் கொண்டிருக்கும் போது, அவை சுயாதீனமான முறையில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கும் வேளையிலும் கூட, செயலாற்ற மதிப்பீடுகளில் கசியும் தாக்கம் ஏற்படக்கூடும். உதாரணமாக ஊழியரின் கடந்தகால மோசமான செயலாற்றம், அவர்களது அண்மைய செயலாற்றம் மிகச் சிறந்ததாகக் காணப்படினும் கூட, அவர்களுக்குச் சராசரி தரமிடலை வழங்குவதற்கே தரமிடுபவரை இட்டுச்செல்லும். இத்தாக்கமானது, தரமிடுபவர் ஊழியர் தொடர்பான அவரது கண்ணோட்டத்தினை மாற்றுவதற்கு தயங்குவது, தொடர்ச்சியான பாரபட்சம் அல்லது கடந்தகால செயலாற்றம் எதிர்காலச் செயலாற்றத்திற்கான அடையாளமாக நம்பப்படுவது போன்ற பல்வேறு காரணங்களினால் ஏற்படுகிறது.

### 5.1.8. இயற்பண்பு தொடர்பான வழுக்கள்

இயற்பண்பு என்பது செய்முறையொன்றாகும். இது தனிப்பட்டவர்கள் ஒருவரின் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை அல்லது நடத்தைகளுக்கு பின்னாலுள்ள காரணங்கள் அல்லது எண்ணங்கள் பற்றி அனுமானிக்கச்

செய்கிறது. இவ்வனுமானங்கள் வெளிப்படையான சான்றுகளிலும் பார்க்க அகநிலை சார்ந்த முடிவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும் போது இயற்பண்பு சார்ந்த வழுக்கள் நிகழ்கின்றன.

உதாரணமாக, செயலாற்ற மீளாய்வொன்றில், ஊழியரொருவர் வினாவொன்றிற்கு எதிர்மறையான பதிலொன்றினை வழங்கியதன் காரணமாக மதிப்பீட்டாளர், ஊழியர் அவரது வேலை தொடர்பில் எதிர்மறையான எண்ணத்தினைக் கொண்டிருப்பதாக உடனடியாக அனுமானிப்பாராயின் இயற்பண்பு தொடர்பான வழு ஏற்படக்கூடும். இவ்வனுமானமானது, வெளிப்புறச் சூழல் அல்லது தவறாகப் புரிந்துகொள்ளும் தன்மை போன்ற ஊழியர்களின் பதிலிறுப்புக்களின் மீது செல்வாக்கினைக் கொண்டிருக்கக்கூடிய, மற்றைய நேர்மையான காரணிகளைப் பரிசீலனையில் கொள்ளாமல் மேற்கொள்ளப்படுகிறது.

### 5.1.9. முதல் அபிப்பிராயம்

ஆளொருவர் ஆரம்பத்தில் நேர்மறையான உணர்வினைக் கொண்டிருக்கும் போது அது அவர்களது ஒட்டுமொத்த செயலாற்றத்தின் அல்லது பண்புகள் தொடர்பான கண்ணோட்டத்தில் செல்வாக்கினை ஏற்படுத்தி அவர்களது தகைமைகளில் அல்லது பொதுவான இயலாற்றல்களில் மிகையான மதிப்பீடுகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது. மாறாக, முதல் அபிப்பிராயம் எதிர்மறையானதாக இருப்பின், இது, தனிப்பட்டவரின் செயலாற்றல் அல்லது இயலாற்றல் குறைத்து மதிப்பிடப்படுவதற்கு வழிவகுக்கும்.

### 5.1.10. சமீபத்திய தாக்கம்

தனிப்பட்ட ஒருவரின் செயலாற்றம் பற்றிய தரமிடுபவரின் மதிப்பீடு, அவரின் மிக நீண்ட காலம் நீடித்த காலப்பகுதிக்கான செயலாற்றத்தினைப் பரிசீலனையில் கொள்வதிலும் பார்க்க மிக அண்மைக் கால நடத்தைகள் அல்லது நிகழ்வுகளின் பாரிய செல்வாக்கிற்கு உட்படும் போது நிகழ்கிறது. உதாரணமாக, ஆண்டு முழுவதற்குமான அவர்களது செயலாற்றத்தினைக் கருத்திற்கொள்ளாது, கடந்த மாதத்தில் காணப்பட்ட அவர்களது மிகச் சிறந்த செயலாற்றத்தினை முக்கியமாக ஆண்டிற்கான மிகச் சிறந்த செயலாற்றமாகக் கருதி ஊழியரைத் தரமிடுவதாகும்.

### 5.1.11. மாறுபட்ட வழுக்கள்

தனிப்பட்ட ஒருவரின் செயலாற்றம் முழுமையான நியதிகள் அல்லது பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படாது மற்றையவர்களின் செயலாற்றத்துடன் ஒப்பிடப்படும் போது செயலாற்ற மதிப்பீட்டில் "மாறுபட்ட வழுக்கள்" தோன்றுகின்றன. இவ்வழுவினை இரண்டு முக்கிய வழிகளில் தெளிவுபடுத்தலாம்.

1. நேர்மறையான மாறுபட்ட வழுக்கள்: மோசமாகச் செயற்படுகின்ற மற்றையவர்களின் செயலாற்றத்துடன் ஒப்பிடப்படுவதன் காரணமாக உண்மையில் தனிப்பட்ட ஒருவரின் செயலாற்றம் சிறந்ததாகத் தோன்றும் போது இது நிகழ்கிறது. உதாரணமாக தேவையான நியமங்களைப் பூர்த்தி செய்திராத இவரது நண்பர்களின் குறைந்த செயலாற்றத்தினை இவரின் செயலாற்றம் விஞ்சிக் காணப்படுவதன் காரணமாக அந்த ஊழியர் இலகுவான முறையில் உயர்ந்த செயலாற்றத் தரமிடலைப் பெறமுடியும்.

2. எதிர்மறையான மாறுபட்ட வழுக்கள்: மாறாக, மிகச் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்ட மற்றையவர்களின் செயலாற்றத்துடன் ஒப்பிடப்படுவதன் காரணமாக தனிப்பட்ட ஒருவரின் செயலாற்றம் மோசமானதாகக் காணப்படும் போது இவ்வெதிர்மறையான மாறுபாடான வழுக்கள் நிகழ்கின்றன. இவ்விடயத்தில் தனிப்பட்டவரின் செயலாற்றம் திருப்திகரமானதாக அல்லது சராசரி மட்டத்திலும் பார்க்க கூடுதலானதாக இருப்பினும் கூட, அவரின் செயலாற்றம் உயர்ந்த செயலாற்றத்தினைக் கொண்ட நண்பர்களுடன் ஒப்பிடப்படுவதன் காரணமாக குறைந்த தரமிடலைப் பெறக்கூடும்.

### 5.1.12. அனுதாபத் தாக்கம்

செயலாற்ற மதிப்பீட்டில் தனிப்பட்ட ஒருவரின் செயலாற்ற மதிப்பீட்டில் தரமிடுபவரின் தீர்ப்பு, அவர்களது உண்மையான விருப்பு வெறுப்பற்ற மதிப்பீடுகளிலும் பார்க்க அனுதாபம் அல்லது கருணை என்ற உணர்வுகளின் செல்வாக்கிற்குட்படும் போது "அனுதாபத் தாக்கம்" நிகழ்கிறது. இது, தனிப்பட்டவர்களின் வேலை பற்றிய உண்மையான செயலாற்றத்தினைக் கவனத்திற்கொள்ளாது, தனிப்பட்ட முறையில் கஷ்டங்களுக்கு அல்லது இடர்ப்பாடுகளக்கு முகம்கொடுக்கின்ற தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட வீங்கிய தரமிடல்களுக்கு அல்லது மதிப்பீடுகளுக்கு வழிவகுக்கக்கூடும்

## 6. தரமிடல் வழுக்களுக்கான காரணங்கள்

### 6.1. தரமிடுபவரின் பண்புகள்

தரமிடுபவரின் கண்ணோட்டத்தில் தனிப்பட்டவர்களின் வேறுபட்ட மனச்சால்பு, அறிவுபூர்வமான பாரட்சங்கள் என்பன தரமிடல் வழுக்களுக்கு கணிசமானளவிற்கு பங்களிக்கின்றன. தரமிடுபவரின் ஆளுமைப் பண்புகள் முன்னைய அனுபவங்கள் மற்றும் தனிப்பட்ட பாரபட்சங்கள் போன்ற காரணிகள் மதிப்பீட்டுச் செய்முறையில் செல்வாக்கினை ஏற்படுத்தி தரமிடல்களின் முரண்பட்ட தன்மைகளுக்கு வழிவகுக்கக்கூடும்.

### 6.2. போதுமான பயிற்சியில்லாமை

செயலாற்ற மதிப்பீட்டுத் தொழில் நுணுக்கத்தில் போதுமான பயிற்சியும் வழிகாட்டலும் இல்லாமையானது தரமிடுவோரிடையேயான தரமிடல் வழுக்களை மேலும் பெரிதாக்கக்கூடும். தரமிடல் பிரமாணம் தொடர்பில் சரியான அறிவுறுத்தல் இல்லாமை, தரமிடுபவரின் மனோதிடம் மற்றும் பாரபட்சங்களைக் குறைக்கும் உபாயங்கள், தனிப்பட்டவர்கள் உணர்வுபூர்வமான தீர்ப்புக்களிலும் உள்ளுணர்வுகளிலும் தங்கியிருக்கின்றமை என்பனவற்றின் காரணமாக வழுக்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் அதிகரிக்கின்றன.

### 6.3. நிறுவன ரீதியான கலாச்சாரம்

நிறுவன ரீதியான கலாச்சாரமும் சூழ்நிலையும் செயலாற்ற மதிப்பீட்டு நடைமுறைகளை வடிவமைப்பதில் இன்றியமையாத வகிபாகத்தினை கொண்டிருப்பதுடன் தரமிடல் வழுக்களின் மீதும் செல்வாக்கினைச் செலுத்துகின்றன. போட்டித்தன்மை, பக்கச்சார்பு அல்லது எதிர்தீங்கு தொடர்பான பயம் என்பனவற்றிற்கு முன்னுரிமையளிக்கும் கலாச்சாரம் அசட்டையான பாரபட்சம் நிறைந்த மதிப்பீடுகளை ஊக்குவிக்குமென்பதுடன் காத்திரமான செயலாற்ற மதிப்பீட்டு முறைமைகளுக்கும் முட்டுக்கட்டையாக அமைந்துவிடும்.

## 7. விதந்துரைப்புக்கள் மற்றும் முடிவுரை

### 7.1. பொதுவான தரமிடல் வழுக்களைக் குறைப்பதற்கான விதந்துரைப்புக்கள்

#### 7.1.1. தரமிடுபவருக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி

செயலாற்ற மதிப்பீட்டுத் தொழில் நுணுக்கள், தரமிடுபவரின் அளவுத்திருத்தம், பாரபட்சத்தன்மைகளைக் குறைத்தல், உபாயங்கள் மீதான அனைத்தையுமுள்ளடக்கிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவது தரமிடுபவரின் தகுதியை உயர்த்தி தரமிடல் வழுக்களை குறைவடையச் செய்யும். பின்னூட்டல் செயலமர்வுகள் மற்றும் நெருக்கமான கலந்துரையாடல்கள் என்பன உள்ளிட்ட தற்போது நடைபெற்றவரும் அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் தரமிடுபவர்களின் மதிப்பீட்டுத் தேர்ச்சியை மேலும் மெருகூட்டி மதிப்பீட்டில் காணப்படும் பொருத்தமான தன்மையினை ஊக்குவிக்கும்.

#### 7.1.2. தரப்படுத்தப்பட்ட தரமிடல் அளவுகள்

தரப்படுத்தப்பட்ட தரமிடல் அளவுகளையும் தெளிவான செயலாற்றப் பிரமாணங்களையும் நடைமுறைப்படுத்துவது உள்ளுணர்வு சார்ந்த செல்வாக்கினைக் குறைத்து மதிப்பீடுகளில் நிலையான தன்மையினை உறுதிப்படுத்தும். செயலாற்ற மதிப்பீட்டின் பொருட்டு புறநிலை சார்ந்த அடிப்படை அளவுக்குறியீட்டினை நிறுவுவதன் மூலம் நிறுவனங்கள் பாரபட்சங்களினால் எழும் தாக்கங்களைக் குறைக்கமுடியும் என்பதுடன் மதிப்பீட்டுச் செய்முறையின் நம்பகத்தன்மையினையும் செல்லுபடியாகும் தன்மையினையும் உயர்த்தமுடியும்.

#### 7.1.3 பல் தரமிடலாளர் மதிப்பீடு

பல் தரமிடலாளர்களைக் கூட்டிணைத்தல் அல்லது மதிப்பீட்டுச் செய்முறையின் கண்ணோட்டம் தனிப்பட்டவர்களின் பாரபட்சங்களைக் குறைக்கும் என்பதுடன் செயலாற்ற தரமிடல்களில் நம்பகத்தன்மையினையும் அதிகரிக்கும். ஒத்தவர்களின் மதிப்பீடுகள், சுயமதிப்பீடுகள் மற்றும் மேல் நோக்கிய பின்னூட்டல் பொறிமுறைகள் என்பனவற்றைப் பயன்படுத்துவது ஊழியர்களது செயலாற்றம் தொடர்பில் கூடுதலானளவிற்கு அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் சமநிலையான பார்வையினை வழங்கும்.

#### 7.1.4. கிரமமான கண்காணிப்பு மற்றும் பின்னூட்டல்

தரமிடுபவர்களுக்காக சரியான நேரத்தில் கிடைக்கும் பின்னூட்டலுடன் இணைந்த செயலாற்ற மதிப்பீட்டுச் செய்முறையின் கிரமமான கண்காணிப்புத் தரமிடல் தவறுகைகளை அடையாளம்கண்டு சரியான முறையில் கட்டுப்படுத்துகிறது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் திறந்த தொடர்பூட்டல் என்பனவற்றை மேம்படுத்துவதன் மூலம் நிறுவனங்கள் நியாயபூர்வமான கலாச்சாரத்தினையும் செயலாற்ற மதிப்பீட்டு நடைமுறைகளில்

தொடர்ச்சியான முன்னேற்றத்தினையும் பேணி வளர்க்க முடியும்.

### 7.2. முடிவுரை

முடிவாக, கட்டுரையாளர், தரமிடல் வழுக்கள், ஊழியரின் செயலாற்ற மதிப்பீட்டு முறைகளின் துல்லியமான மற்றும் நியாயபூர்வத் தன்மைகளுக்கு கணிசமான சவால்களை ஏற்படுத்துவதாக நம்புகிறார். இவ்வழுக்களுக்கான அடிப்படைக் காரணங்களைப் புரிந்து கொள்வதன் மூலமும் பொருத்தமான தணித்தல் உபாயங்களை நடைமுறைக்கிடுவதன் மூலமும் நிறுவனங்கள் அவர்களது செயலாற்ற மதிப்பீட்டு முறைமைகளின் நம்பகத்தன்மை, செல்லுபடியாகும் தன்மை மற்றும் காத்திரமான தன்மை என்பனவற்றை உயர்த்திக் கொள்ளமுடியும். தற்பொழுது இடம்பெற்று வருகின்ற பயிற்சி, தரப்படுத்தப்பட்ட தரமிடல் அளவுமுறைகள், பல்தரப்படுத்துகை, மதிப்பீடுகள் மற்றும் கிரமமான கண்காணிப்பு என்பனவற்றின் மூலம் நிறுவனங்கள் பாரபட்சமான முறைகளைத் தணித்து, நேர்மைமிக்க தன்மைகளை மேம்படுத்த முடியும் என்பதுடன் செயலாற்ற மதிப்பீடுகள், ஊழியர்களின் அபிவிருத்திக்கு வசதியளிக்கின்ற அவற்றின் உண்மையான நோக்கம் பூர்த்தி செய்யப்படுவதனையும் நிறுவன ரீதியான வெற்றியையும் உறுதிப்படுத்த முடியும்.

### உசாத்துணைகள்


1. Cassandra Williams, March 29, 2023 - Employee Performance Evaluation: Definition, Benefits and How To Prepare
2. Elaine D. Pulakos - Performance Management
3. Performance Evaluation - Definition, Method, Survey and Example (questionpro.com)
4. A Study of Performance Appraisal System in Indian Banking Sector (researchgate.net)
5. Markos, S., & Sridevi, M. S. (2010). Employee engagement: The key to improving performance. International journal of business and management, 5(12), 89.
6. Fred C. Lunenburg - Performance Appraisal: Methods and Rating Errors

# தடைகளை உடைத்தல், பாலங்களை அமைத்தல்: உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவதன் சிக்கலான தன்மையினை உபாய முறையில் வழிநடத்திச் செல்லல்



முனைவர் வி.டி. விக்கிரமாராய்ச்சி
துணைப் பணிப்பாளர்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

## அறிமுகம்

உலகின் பல்வேறு மூலைகளிலும் மனித நாகரீகம் அரும்பத் தொடங்கியதிலிருந்து மக்களின் நலனோம்புகைகளை வடிவமைத்துக் கொள்வதில் வர்த்தகம் தவிர்க்க முடியாத வகிபாகமொன்றினை ஆற்றி வருகின்றது. கடந்த பல நூற்றாண்டுகளாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அடையப்பட்ட முன்னேற்றம், போக்குவரத்து உட்கட்டமைப்பில் அடையப்பட்ட மிகப்பெரும் விடாமுயற்சிகள் மற்றும் போட்டிகளினூடாக அடையப்பட்ட முன்னேற்றம் கண்ட உற்பத்தியாக்கம் என்பன உலகம் முழுவதிலும் வர்த்தகத்தில் அசாதாரண விரிவாக்கமொன்றிற்கு வழிவகுத்து, குடித்தொகையின் வாழ்க்கைத்தரத்தினை முன்னேற்றமடையச் செய்தன. மறுபுறத்தில், உலகளாவிய காரணிச் சந்தைகள் குறிப்பாக, எல்லை கடந்த மூலதனத் திரட்டல்கள் தொடர்ந்தும் பிரகாசமடைந்து, இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரான தசாப்தங்களில் இவை மிகப் பெருமளவில் மேம்பாடடைய வழிவகுத்தன. இவையனைத்தும் உலக மயமாக்கல் என நாம் இன்று அழைக்கின்ற செய்முறைக்கு படிப்படியாக மாறிச் செல்கின்ற விதத்தில் வரலாறு முழுவதிலும் பாரிய பொருளாதார ஒருங்கிணைப்பினை நோக்கி உலகம் முன்னோக்கிச் செல்வதனைக் காட்டுவனவாகவுள்ளன. எனினும், பொருளாதார உணர்வுகளிலும் பார்க்க புவிசார் அரசியல் கரிசனைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படுவதன் காரணமாக எல்லை கடந்த வர்த்தகம் மீது ஏற்படுகின்ற மிகப்பெரும் தடைகள் நாடுகளின் அண்மைக்காலப் போக்குகளில் எச்சரிக்கை உணர்வினை ஏற்படுத்துவதாக இருப்பது சஞ்சலங்களைத் தோற்றுவிக்கிறது. உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவதனை மேலும் பெரிதாக்குகின்ற விதத்தில், உலகில் போட்டியிடுகின்ற நாடுகளின் அணிகள் அதிகரித்து வருவதனையும் ஒவ்வொரு அணியும் உபாயம் மிக்க நலவுரித்துக்கள் மற்றும் பகிரப்பட்ட பெறுமானங்கள் என்பனவற்றின் அடிப்படையில் உலகின் ஏனைய பகுதிகளை வென்றெடுப்பதற்கும் முயற்சிக்கின்றன. கொள்கை வகுப்பின் பல்வேறு அம்சங்கள் மீதும் இம்முக்கிய நிகழ்வு கொண்டிருக்கும் பெறுபேறுகள் பரந்தளவிலான தாக்கங்களைக் கருத்திற்கொண்டு, இக்கட்டுரையானது இப்பிரச்சனையின் பின்னணி தொடர்பில் சுருக்கமான விளக்கமொன்றை வழங்குவதனையும் உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவதனைக் கட்டுப்படுத்துவதனால் ஏற்படும் பெறுபேறுகள் எந்தளவிற்குச் சிறப்பானதாக அமையும் என்ற கண்ணோட்டத்தினை வழங்குவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலகளாவிய நன்மைகள்


உலகளாவிய மயப்படுத்தல் என்பது, பன்னாட்டு வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பவியல் பரிமாற்றல்கள், புலம்பெயர்தல் மற்றும் தகவல் பாய்ச்சல்கள் என்பனவற்றினூடாக ஒருங்கிணைத்தல் மற்றும் ஒன்றிலொன்று தங்கியிருத்தல் என்பனவற்றிற்கு வழிவகுக்கும் பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் குடித்தொகை என்பனவற்றிற்கிடையே இணைப்புக்கள் கட்டியெழுப்பப்படுவதனைக் குறிக்கிறது.

கடந்த ஒரு சில தசாப்தங்கள் உலகமயமாக்கலின் சுபீட்சம் மிக்க யுகமாக விளங்கியதுடன் உலகம் முழுவதிலுமுள்ள அநேகமான மக்கள், மேம்பட்ட நலனோம்புகைகளுக்கு வழிவகுத்த உலகளாவிய பொருளாதார ஒருங்கிணைப்பின் அளவுக்கதிகமான நன்மைகளின் ஊடுகடத்தல்களின் காரணமாக வறுமை, பட்டினி மற்றும் இளவயது மரணங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளக்கூடியவர்களாக இருந்தனர். உலகளாவிய பொருளாதார ஒருங்கிணைப்பின் நன்மை மற்றும் தீமைகள் பற்றிய வாதங்கள் கடந்த ஆண்டுகளில் தீவிரமடைந்து காணப்பட்டதுடன் பொருளாதார மற்றும் கொள்கை வட்டாரங்களில் உலகமயமாக்கல்கள் மீதான கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் வலுவடைந்தன. பொதுவாக, உலகமயமாக்கல், அளவுக்கதிகமான முறைகளில் நாடுகளுக்கிடையேயான பொருளாதாரம் ஒன்றிலொன்று சார்ந்திருப்பதனை வளர்த்துக் கொள்வதன் மூலம் மக்களின் நலனோம்புகை உயர்த்தப்படுகிறது என நம்பப்படுகிறது. உலகமயமாக்கல் மூலமாக உருவாக்கப்படுகின்ற இணைப்புக்கள், பொருட்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்து கொள்வதில் நாடுகள் விசேடத்துவப் பண்புகளை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் உலகளாவிய ரீதியில் மூலவளங்கள் ஒதுக்கீடு செய்யும் வினைத்திறன் அதிகரிப்பதற்கு காரணமாக அமைகிறது. இதன்மூலம் இந்நாடுகள் ஒப்பீட்டு ரீதியில் அநுகூலங்களை அனுபவிக்கின்றன. மேலும், எல்லைகளைக் கடந்து அறிவும் சிந்தனைகளும் பரப்பப்படுவதன் வாயிலாக உலகமயமாக்கல் தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றங்களையும் புத்தாக்கங்களையும் தூண்டுவதன் மூலம் வளர்ச்சி உத்வேகப்படுத்தப்படுவதுடன் சுபீட்சம் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. எனினும், வரைபடம் 1, 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வர்த்தகம் உறுதியாக வளர்ச்சியடைந்தமையினைக் காட்டுவதுடன் இந்நிலைமை அடுத்த நூற்றாண்டின் முதல் தசாப்த காலத்திலும் தொடர்ந்ததெனினும் அதன் பின்னர் வீழ்ச்சியொன்றினைக் கொண்டிருந்தது.

### தயக்கம் நிறைந்த ஒத்துழைப்பு

இருப்பினும் கூட, கடந்த ஒரு சில ஆண்டுகளில், குறிப்பாக, உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான காலப்பகுதியில், உலகளாவிய பொருளாதாரம், ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டுள்ள அணிநாடுகளிடையே அதிகளவில் பிரிக்கப்பட்டிருப்பதனை எடுத்துக்காட்டுகின்றமை முக்கியமானதொரு நிகழ்வாகக் காணப்படுவதுடன், இது, உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுதல் என்ற சொற்பதத்தின் மூலம் அழைக்கப்படுகிறது. உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படல் என்பது பாதுகாப்புத் தன்மை மற்றும் தன்னலம் சார்ந்த விருப்புக்கள் என்பனவற்றின் மூலம் வர்த்தகத்திற்கும் முதலீடுகளுக்கும் அதிகரித்தளவில் ஏற்படுத்தப்படும் தடைகளினால் ஏற்படுத்தப்படுகிறது என அதன் பண்பு பற்றிக் குறிப்பிடப்படுகிறது. இதன் தீவிரமான தன்மையானது, எதிராளிகளின் பொருளாதார அணிகளை உடைத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நவீன பொருளாதாரப் பனிப்போருக்குள் நாடுகள் நுழைந்து கொள்ளவும் கடந்த பல தசாப்தங்களாகக் காணப்படக்கூடியதாக இருந்த உலகமயமாக்கலிருந்து

**வரைபடம் 1: திறந்த வர்த்தகம் (ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளின் தொகை, மொ.உ.உற்பத்தியின் சதவீதம்) 1870 - 2021**





*மூலம்: ப.நா.நிதியம் (2023)*

உருவாக்கப்பட்ட நன்மைகள் பின்தள்ளப்படுகின்ற இடர்நேர்வுகளுக்கும் காரணமாக அமைகிறது. உதாரணமாக, பொருட்கள் மற்றும் பணிகளின் வர்த்தகம் மற்றும் முதலீடு மீது வருடாந்தம் உலகளாவிய ரீதியில் விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளின் எண்ணிக்கை கடந்த நான்கு ஆண்டுகளில் அளவுக்கதிகமாக அதிகரித்திருக்கிறது (வரைபடம் 2). வியப்பூட்டும் விதத்தில், உலகளாவிய பொருளாதார துண்டாக்கப்படுவதனால் ஏற்படும் இழப்பு அதிகளவு அபாயகரமான கட்டத்தினை அடைந்திருக்கிறது. ப.நா. நிதியம், உலகளாவிய பொருளாதார வெளியீட்டின் மீது துண்டாக்கப்படுவதன் தாக்கம் நீண்ட காலத்தில் 7 சதவீதத்திற்கு அதிகமாக அல்லது தற்போதைய ஐ.அ.டொலர் நியதிகளில் ஏறத்தாழ 7.4 றில்லியன் டொலர்களாக இருக்கும் என மதிப்பிட்டிருக்கிறது. இது ஜேர்மன் மற்றும் பிரான்சின் இணைந்த பொருளாதாரத்தின் அளவிற்குச் சமமானதாகவும் ஆபிரிக்காவின் துணைசகாராவின் வருடாந்த வெளியீட்டில் மூன்று மடங்கிற்குச் சமமானதாகவும் இருக்கும். பொதுவாகப் பார்க்கையில் உலகமயமாக்கலின் பல தசாப்த கால நன்மைகள் பின்னடைந்து போவதற்கான அச்சுறுத்தலின் கீழ் காணப்படுகின்றன.

அண்மைக்காலச் சான்றுகள், சமகால உலகளாவிய புவிசார் அரசியல் நிகழ்வுகள் தொடர்பான கரிசனைகளுக்கு மத்தியிலும், கொள்கை வகுப்போர் பொருளாதார இறைமையினைப் பேணிக் கொள்வது தொடர்பில் அதிகரித்தளவு எச்சரிக்கையினையுடையவர்களாக இருந்தமையினை எடுத்துக்காட்டுகின்றன. உக்ரேன் போரின் பொருளாதார தாக்கங்கள், செங்கடலில் காணப்படும் நிலைமை, பாலஸ்தீன - இஸ்ரேல் மோதல்கள் மற்றும் அவற்றிலிருந்து கசியும் உலகளாவிய தாக்கங்கள் சமாதான கால பொருளாதாரத்தின் பங்கிலாபங்கள் நீண்ட காலங்களுக்குக் கிடைக்கத்தக்கதாக இருக்கமாட்டா என்பதனை மீண்டும் வலியுறுத்துவதாக இருக்கின்றன. அத்துடன் உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவதனை, நிறுவன மட்டத்தில் “அண்மிய நாடுகளில்” இருந்து தேசிய மட்டத்தில் பிராந்திய வர்த்தக இணைப்புக்கள் வரையிலான வீச்சில் பல்வேறுபட்ட வடிவங்களில் சிநேகபூர்வமான பொருளாதாரங்களைப் பாரபட்சமானதொரு முறையில் அணுகுவதற்கு புவிசார் அரசியல் அணிகளை உருவாக்கும் விதத்தில் மேற்கொள்ள முடியும். உதாரணமாக, தேசிய மட்டத்தில் நாட்டின் பாதுகாப்பு தொடர்பிலான கரிசனைகள், தொழிலாளர் புலம்பெயர்வு மற்றும் எல்லை கடந்த வர்த்தகத்திற்கான துறைமுகங்களை அணுகுவதற்கான ஏற்பாடுகள் ஊடான வழங்கல் சங்கிலி இணைப்பு பற்றி கொள்கை வகுப்போர் கூடுதலானளவிற்கு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியிருக்கும். மேலும், புலமைச் சொத்து உரிமைகள் தொடர்பான சாத்தியமான வரம்பு மீறல்கள் பற்றி கூட்டாண்மைகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதுடன் எல்லை கடந்த விதத்தில் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பில் வெளிநாடுகளிலுள்ள அவர்களது துணை நிறுவனங்களுடனும் கூட எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். இதன்படி, அரசாங்கங்கள் பொருளாதார இறைமையினைக் குறைத்துவிடக்கூடிய அதிகரித்துவரும் அச்சுறுத்தல்கள் பற்றி அதிகளவிற்கு கரிசனைகளுடன் இருக்க வேண்டியிருக்கும்.

அத்துடன், நிகழக்கூடிய ஒருங்கிணைப்பிற்கெதிரான பாரபட்சங்கள் பாதுகாப்புச் சார்ந்த மற்றும் உலகளாவிய

**வரைபடம் 2: ஆண்டுதோறும் உலகளவில் விதிக்கப்படுகின்ற வர்த்தகக் கட்டுப்பாடுகளின் எண்ணிக்கை**




*மூலம்: ப.நா.நிதியம் (2023)*

மயமாக்கலுக்கெதிரான புதிய போக்கினை அதிகரிப்பனவாகவுள்ளன. உலகம் முழுவதிலும் நலனோம்புகையிலும் உற்பத்தித்திறன் முன்னேற்றங்களிலும் பரந்த அடிப்படையிலான மேம்பாடுகள் காணப்பட்ட போதும், அதிகரித்தளவிலான ஏற்றத்தாழ்வுகள், விரைந்து ஏற்படும் காலநிலை மாற்றங்கள் மற்றும் மூலவளங்கள் சுரண்டப்படுதல் என்பனவற்றிற்காக உலக பொருளாதார மயமாக்கல் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்தான அதிகரித்த போட்டிச் சூழ்நிலையில் ஏற்பட்டு வரும் தொழில் இழப்புக்களும் உள்நாட்டு நிறுவனங்கள் மூடப்பட்டு வருவதும் பன்னாட்டு ரீதியான ஏற்றத்தாழ்வுகளுக்கு காரணமாக அமைந்து உள்நாட்டு நிறுவனங்களில் வெளிநாட்டவரின் சொத்துடமை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைகிறது. பொருளாதாரக் கொள்கைகளில் பாதுகாப்புத் தன்மையினைப் பேணக்கூடிய உலகமயமாக்கலுக்கெதிரான மனோபாவம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தில், நாடுகள் உலகமயமாக்கலினால் ஏற்படக்கூடிய நன்மைகளை விட, நாட்டின் நலவுரித்துக்களில் எச்சரிக்கையுடன் இருப்பதிலேயே நாட்டமுடையவையாக இருக்கும். இதில் சுவாரஷ்யமான விடயம் யாதெனில், 2024இல் உலகம் முழுவதிலும் ஏறத்தாழ 70 நாடுகளில் தேசிய தேர்தல்கள் நடத்தப்படவுள்ளமையினால் உலகமயமாக்கலுக்கெதிரான மனோபாவங்களின் இடர்நேர்வுகள் கொள்கை சிந்தனாவாதத்தில் பிரதான இடத்தினைப் பெற்றிருப்பது அதிகளவிற்கு மனக்கவலையை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடுமென்பதேயாகும்.

மேலும், உலகளாவிய பொருளாதார துண்டாக்கப்படுதல்கள் எல்லை கடந்த இணைப்புக்களின் மற்றைய வடிவங்களுக்கு விரிவாக்கப்படுவதன் தாக்கம் தடங்கலுற்ற மூலதனப்பாய்ச்சல்கள், தொழில்நுட்ப இணைப்பினை இல்லாதொழித்தல் மற்றும் புலம்பெயர்தல் மீதான கட்டுப்பாடுகள் போன்ற பண்புகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளின் காரணமாக பொருட்கள் மற்றும் மூலதனத்தின் உலகளாவிய பாய்ச்சல்களின் அளவுகள் குறைவடைந்த போதும் கூட, உலகமயமாக்கலில் காணப்படும் புதிய போக்குகள் இந்நிகழ்வுகள் மாற்றமடைந்து வருவதனைக் காட்டுவதனைக் கவனிப்பது பொருத்தமுடையதாகும். அத்துடன் மூலதனப்பாய்ச்சல்களுக்குக் காணப்படும் இடையூறுகள், குறிப்பாக, வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்குக் காணப்படும் இடையூறுகள் குறைந்த மூலதனப்பாய்ச்சல்களை ஏற்படுத்துவது மட்டுமன்றி, நிதியியல் ஆழப்படுத்தல் மற்றும் தொழில்நுட்பங்கள் போன்ற கசியும் நன்மைகளின் பரவல்களுக்கும் முட்டுக்கட்டையாக விளங்குவதன் காரணமாக தீங்குபயப்பனவாக அமையும். அத்துடன் புவிசார் அரசியல் அணிகள் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் சொத்துப்பட்டியல் பாய்ச்சல்கள் இரண்டின் மீதும் அதிகரித்த செல்வாக்கினைக் கொண்டுள்ளன. தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்திப் பொருளாதாரங்கள் அவற்றின் புவிசார் அரசியல் அணியிலிருந்து மிகத் தூரத்திலிருக்கும் பொருளாதாரங்களிலிருந்து, முக்கியமாக தோற்றம்பெறும் பொருளாதாரங்களுக்கான நேரடி வெளிநாட்டு முதலீட்டுப்பாய்ச்சல்களாக இருப்பதனால், அத்தகைய பொருளாதாரங்கள் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மீள ஒதுக்கீடு செய்யப்படுவதன் காரணமாக மிகக்கூடுதலானளவிற்கு பாதிக்கப்படுவனவாக இருப்பது அடையாளம் காணப்பட்டிருப்பதன் காரணமாக, உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுப்பாய்ச்சல்களின் இயக்கவாற்றலில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கம் விகிதசமமற்ற அளவில் இருக்கக்கூடும். இது, மீளவமைப்பதனால் ஏற்படும் இடர்நேர்வுகள் பொருளாதாரத்தின் அளவினையோ அல்லது அது எவ்வளவு முன்னேற்றம் கண்டுள்ளது என்பதனையோ கருத்திற்கொள்ளாது தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்திப் பொருளாதாரங்கள் முழுவதிலும் பரந்து காணப்படுகின்றது. அதேவேளையில், குறிப்பாக, உற்பத்தித்திறனின் நன்மைகள் குறைவடைந்து காணப்படுகின்றமை மற்றும் குறைந்த மூலதனமயமாக்கல் என்பனவற்றின் காரணமாக, முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களை அணுகுவதற்கான வாய்ப்பும் குறைவடைந்து போனமையினையும் எடுத்துக்காட்டுகின்றது (ஆன் 2023). இதன்படி, உதவியைப்பெறுகின்ற பொருளாதாரங்கள் குறைந்த மூலதனத் திரட்சி, தொழில்நுட்பவியல் மெதுவாக ஆழப்படுத்தப்படுவது, வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்தான போட்டி குறைவாக இருக்கின்றமை காரணமாக குறைந்த உற்பத்தித்திறன் மேம்பாடுகள் மற்றும் கீழ்நோக்கிய துறைகளில் காணப்படும் குறைந்த கேள்வி போன்ற அளவுக்கதிகமான எதிர்மறையான தாக்கங்களை அனுபவிக்கின்றன.

### அயல்நாடுகளுடனான உறவுகள்

உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவது பல்வேறு முனைகளில் உலகப் பொருளாதாரத்தினைப் பாதிக்கின்றதெனினும், உலகளாவிய பொருளாதாரத்திற்கு இந்நிகழ்வுகள் எவ்வளவு செலவுகளை ஏற்படுத்துகின்ற போதிலும் கூட, சில பின்னணிகளில் இது நன்மைகளை

அளிக்காமலுமில்லை. கடந்த சில தசாப்தங்களில் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களினது தயாரிப்பின் பங்குகளில் வீழ்ச்சியை ஏற்படுத்திய கைத்தொழில்மயமழிதல் கரைகடந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கை மீது குற்றம் சுமத்தியதெனினும், பெருமளவு ஒருங்கிணைப்புக்களைப் பேணி வளர்த்துள்ளது. எனினும், கரைகடந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் காணப்பட்ட மிக அண்மைய போக்கு யாதெனில் அண்மிய நாடுகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாகும். அதாவது உள்நாட்டு நிறுவனங்கள் அண்மைய நாடொன்றில் அமைந்துள்ள வழங்குநர்களுடன் பணியாற்று விரும்புகின்ற தன்மையாகும். கரைகடந்த நடவடிக்கைகளைப் போலன்றி, இது தூர இடங்களின் பணிகளுடனும் அடிக்கடி வெளிநாட்டு வழங்குநர்களுடனும் தொடர்புபடுவதுடன் பொருளாதார அநுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அண்மிய புவியியல் பிரதேசங்களிலிருந்து பயன்களை அடைய கம்பனிகளை அனுமதிக்கிறது. மேம்பட்ட தொடர்பூட்டல் மற்றும் ஒத்துழைப்பு, அதிகரித்த வினைத்திறன் என்பனவற்றிற்குப் புறம்பாக, குறுகிய போக்குவரத்து தூரம் மற்றும் உற்பத்திக்கு எடுக்கும் குறைந்த காலம் என்பன காரணமாக கரைகடந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் மூலம் தொழிற்பாடுகளின் நெகிழ்ச்சித்தன்மை மற்றும் விரைந்ததன்மை, மேம்பட்ட இடர்நேர்வுத் தணிப்பு, உறுதியான தன்மை மற்றும் குறைவான சூழல் தாக்கம் போன்ற பல வழங்கல் சங்கிலி அநுகூலங்கள் அண்மிய நாடுகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் காணப்படுகின்றன. அத்தகைய வழங்கல் சங்கிலி அநுகூலங்களின் பொருளாதார ஊக்குவிப்புக்கள் கைத்தொழில்மயமழிதலையும் பிராந்திய மயமாக்கலையும் தூண்டி உலகளாவிய பொருளாதாரத்திலிருந்து பிராந்தியங்கள் பிரிந்து போவதற்கு பெருமளவிற்கு வழிவகுக்கின்றன (லவாஜ் மற்றும் மக்சிலிகோவா 2023). அண்மையில் தோற்றம் பெற்றுள்ள மற்றொரு முக்கிய நிகழ்வு யாதெனில் 'சிநேகபூர்வ நடவடிக்கை' ஆகும். அதாவது தற்பொழுது இடம்பெற்று வருகின்ற பன்னாட்டு அரசியல் மற்றும் வர்த்தக பதற்றங்களின் காரணமாக அணிகளிலுள்ள உறுப்பு நாடுகளிடையே வியாபாரங்களை ஏற்படுத்திக் கொள்வதாகும். இதன்படி, சில சூழ்நிலைகளில் இது குறுங்கால நன்மைகளைக் கொண்டு வருகின்ற போதிலும், நீண்ட காலத்தில் உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவதன் காரணமாக உலகப் பொருளாதாரங்களின் நலன்புரிகளுக்கு ஏற்படக்கூடிய இழப்பு தவிர்க்க முடியாததாக இருக்கும்.

**நிச்சயமற்ற புவிசார் அரசியல் நிலையில் மத்திய வங்கித்தொழில்**

பனிப்போர் முடிவடைந்ததன் பின்னர், எங்கும் வியாபித்திருந்த சாதகமான புவிசார் அரசியல் நிலைமைகள், விரிவடைந்து வருகின்ற உலகளாவிய பெறுமதிச் சங்கிலியூடாக ஏற்பட்ட மேம்பட்ட வர்த்தகப்பாய்ச்சல் மற்றும் உலகளாவிய தொழிலாளர் சந்தைகளில் காணப்பட்ட மீளெழுச்சி என்பனவற்றினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, பாரிய உலகளாவிய ஒருங்கிணைப்பு பேணி வளர்க்கப்பட்டது. இதன்படி, உலகளாவிய அதிர்வுகள் ஊடுகடத்தப்படுவதன் காரணமாக உள்நாட்டு பொருளாதாரத்திற்கு அதிகளவான இடர்நேர்வுகள் ஏற்பட்ட போதும், மேம்பட்ட வர்த்தகத்தினூடாக உள்நாட்டுக் கேள்வியில் மாற்றத்தினை ஏற்படுத்தும் விதத்தில் உலகளாவிய வழங்கல் நெகிழ்ச்சிமிக்கதாக மாறியமை ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்ததும் உறுதித்தன்மை வாய்ந்ததுமான பணவீக்கம் நீண்ட காலம் நிலைபெறுவதற்கு வழிவகுத்தது (பொரோனி மற்றும் மொஜோன் 2017). இதன்விளைவாக, மத்திய வங்கியாளர்கள் உலகளாவிய வழங்கல்பக்க அபிவிருத்திகளிலும் பார்க்க, உள்நாட்டு கூட்டுக் கேள்வி நிலைமைகளினால் தூண்டப்படுகின்ற பணவீக்கத்தின் மீதே கூடுதலான கவனத்தினைச் செலுத்துகின்றனர். எனினும், துண்டாக்கப்படுகின்றமையில் ஏற்படும் அதிகரிப்புக்கள் உலகளாவிய வழங்கல்பக்க நிலைமைகளின் மீதும் மத்திய வங்கித்தொழில் மீதும் பாரிய செயல் விளைவுகளைக் கொண்ட தாக்கங்களை ஏற்படுத்துகின்றனது. உலகளாவிய பெறுமதிச் சங்கிலி துண்டாக்கப்படுவது புவிசார் அரசியல் கரிசனைகளுடன் சேர்ந்து கொண்டமையின் காரணமாக நுகர்வோர் விலைகளின் உலகளாவிய மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு குறுங்காலத்தில் ஏறத்தாழ 5 சதவீதத்திற்கும் நீண்ட காலத்தில் ஏறத்தாழ 1 சதவீதத்திற்குமிடையிலான வீச்சினைக் கொண்டிருப்பதனை அண்மைய ஆய்வுகள் எடுத்துக்காட்டியிருக்கின்றன (அட்டினாசியும் மற்றையவர்களும் 2023). மேலும், வியாபித்துக் காணப்பட்ட மிகக்கூடிய நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த உலகளாவிய வழங்கலைக் கொண்ட நீண்ட காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், வழங்கல் அதிர்வுகள் இனிவரும் காலப்பகுதியிலும் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதனால் பணவீக்க எதிர்பார்ப்புக்களை நிறுத்த முடியாமல் போகும் இடர்நேர்வொன்று காணப்படுகிறது.

பன்னாட்டு ஒதுக்கு நாணயத் துறையினைப் பொறுத்த வரையில், மாற்றமடைந்து வருகின்ற வர்த்தக மாதிரிகள் பன்னாட்டு ஒதுக்குகளின் உள்ளமைப்பில் பிரதிபலிக்கப்படக்கூடும். இதில் இந்திய ரூபா அல்லது

சீன ரென்மின்பி போன்ற மரபுவழியற்ற வர்த்தக ஒதுக்கு நாணயங்கள் முன்னுரிமையினைப் பெறக்கூடும். அத்துடன், நாடுகளின் மத்திய வங்கிகளினால் எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்களில் அவர்களது நாணயங்கள் பயன்படுத்துவதனை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்படுகின்ற கணிசமான பிராந்திய வர்த்தக நடவடிக்கை முயற்சிகளில் ஏற்படும் அதிகரிப்பு இப்போக்கினை மேலும் தூண்டக்கூடும். மேலும், புவிசார் அரசியல் கரிசனைகள் அல்லது தடைகளின் தீர்மானம் காரணமாக வர்த்தகத்திலிருந்து கட்டுப்படுத்தப்பட்டுள்ள நாடுகளுக்கு மேற்குலகத்தினால் வழிநடத்தப்படும் நாணய கட்டமைப்புக்கள் மற்றும் கொடுப்பனவு முறைமைகள் மீது அவை தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கான வாய்ப்புக்களை இப்புதிய ஏற்பாடுகள் வழங்கக்கூடும். நிதியியல் உறுதித்தன்மைப் பக்கத்தில், ஏற்றத்தாழ்வான மூலதனப்பாய்ச்சல்கள் மற்றும் சாத்தியமான பரவல் தாக்கங்களின் காரணமாக உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவது எல்லைகடந்த இடர்நேர்வுகளை தீவிரப்படுத்தக்கூடிய தன்மை காணப்படுகின்ற வேளையில் விலைவேற்று வர்த்தகத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான கதவுகளையும் திறந்துவிட்டிருக்கிறது. இது, மேற்பார்வையினை உறுதிப்படுத்துவதற்கும் அதேவேளையில் தொடர்ந்து காணப்படும் முறைமையியல் சார்ந்த இடர்நேர்வுகளின் கசியும் தாக்கத்தின் மீது அதிகளவில் விழிப்புடன் இருப்பதற்கும் பன்னாட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புக்களுடன் ஒத்துழைப்பதற்கும் மத்திய வங்கிகளுக்கு அழைப்பு விடுக்கின்றது.

மேலும், இறை மற்றும் அமைப்பியல் கொள்கைகளும் கூட, உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவதிலிருந்து உறுதிப்பாட்டிற்கு தோற்றுகின்ற இடர்நேர்வுகளைத் தணிப்பதில் வகிபாகமொன்றினைக் கொண்டிருக்கின்றன. மாற்றமடைந்துவரும் புவிசார் அரசியல் தோற்றப்பாட்டிலிருந்து உருவாகின்ற வழங்கல்பக்க அழுத்தங்களையும் கட்டுப்படுத்த முடியும். உதாரணமாக, வலுவினைப் பன்முகப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட கொள்கைகள், புதிய வழங்கல் சங்கிலிகளில் முதலீடு மற்றும் வழங்கல் சங்கிலியின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பாதுகாப்பதற்கு நிறுவனங்களை ஊக்குவித்தல் என்பனவற்றினூடாக குறைந்த தளம்பல்களுக்கும் தாழ்ந்த பணவீக்கத்திற்கும் வழிவகுக்க முடியும். எனினும், அதிகரித்த வருமான ஆதரவுகளினூடாக அதிகரித்த செலவுகளை நிறைவு செய்வதற்கும், எதிர்பார்க்கப்படாத, தற்காலிகமாக தோன்றி மறைகின்ற மற்றும் பாரிய அதிர்வுகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் அளவுக்கதிகமாக இலக்கிடுவதற்குமாக இறைத் துறையின் மீது ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொள்வது பணவீக்க அழுத்தங்களுக்கு வழிவகுப்பது மட்டுமன்றி, காத்திரமான வழிமுறைகளை எடுப்பதற்கான இறை இடைவெளிகளுக்கும் முட்டுக்கட்டையாக அமைந்தவிடும் (லகார்டே 2023). இதற்கமைய, கொள்கை வகுப்பாளர்கள் முழுமையான கொள்கை நடவடிக்கையினை வடிவமைக்கும் போது இவ்விடைத்தொடர்புகள் பற்றி எச்சரிக்கையுடனும் பாரிய செயல் விளைவுகளைக் கொண்ட தாக்கங்கள் பற்றி தெரிந்திருத்தலும் வேண்டும்.

**புதிய இணைப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கான தேவை**

காலநிலை மாற்றம் மற்றும் புவிசார் அரசியல் தொடர்பான நிச்சயமற்ற தன்மைகள் உட்பட பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டுவரும் சவால்கள் காரணமாக உலகம் கூடுதலான அதிர்வுகளுக்கு உட்படக்கூடிய சாத்தியத்தினைக் கொண்டிருக்கிறது. கொவிட்-19 உலகளாவிய தொற்று, எதிர்பாராத பொருளாதார அதிர்வுகள் பொருளாதார நடவடிக்கையினை எவ்வாறு முடக்கி, அதேவேளையில் ஆழமாக வேரூன்றிய பாதிக்கப்படும் தன்மைகளைத் தீவிரப்படுத்திவிடும் என்பதனைக் கற்பித்திருக்கிறது. மறுபுறத்தில், எதிர்கால வளர்ச்சியை உருவாக்குவதற்கான வலுவான ஆரம்ப வாக்குறுதிகள் காணப்பட்ட போதும், செயற்கை நுண்ணறிவு போன்ற வளர்ந்து வரும் இடையூறு விளைவிக்கும் தொழில்நுட்பங்கள் பொருளாதார ரீதியில் நன்மைபயக்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தாலொழிய குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளைக் கொண்டிருக்கும். அதேவேளையில், இலங்கை உட்பட, வளர்ந்துவரும் சந்தைப் பொருளாதாரங்களின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுதல் கொவிட்-19 இன் தாக்கத்திலிருந்து முழுமையாக மீட்சியுறும் நோக்கத்தினைக் கொண்ட முயற்சிகளுக்குத் தடையாக அமைகின்ற வேளையில், உறுதித்தன்மைப் பக்கத்தில் மேலும் சவால்களைத் தோற்றுவிக்கின்றன. தற்பொழுது தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில் பெரும்பாலானவை வெளிநாட்டு ஒதுக்குகள் போன்ற தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புகின்ற செய்முறைகளில் ஈடுபட்டிருக்கின்ற வேளையில் படுகடன் இடர்ப்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற அழுத்தங்களை இன்னமும் ஒழித்துவிட முடியவில்லை. உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுகின்றமை தொடருமாயின், அத்தகைய நாடுகளின் ஒதுக்குகளைக்

கட்டியெழுப்புவது உலகளாவிய வர்த்தகத்தின் மீட்சியில் காணப்படும் மெதுவான முன்னேற்றத்தின் விளைவாக பாதிக்கப்படக்கூடியதாகவுள்ள வேளையில், படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையும் பலயீனமடைந்து வருகின்றமையும் பாதிக்கப்படும் தன்மையினைப் பெரிதாக்குகின்றது.

உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவதன் பொருளாதார விளைவுகள் வெகுவிரைவில் உலகம் முழுவதிலும் தெளிவாகப் புலனாகக்கூடிய விதத்தில் மாற்றமடையக்கூடியதாக இருப்பது உடனடியாக சீர்செய்யும் நடவடிக்கைகளை அவசியப்படுத்துவதாக இருக்கின்றது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னர் உலகளாவிய பொருளாதாரத்தின் மீட்சி எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மெதுவாக இருப்பதனையும் பரந்தளவிற்கு வியாபித்துக் காணப்படும் பாதிக்கப்படும் தன்மையினையும் கருத்திற்கொள்கையில், நடவடிக்கையினை மேற்கொள்ளாதிருப்பது அதேபோன்று நடவடிக்கையினைத் தாமதமாக எடுப்பது ஆகிய இரண்டும் சமமான தீங்குகளைக் கொண்டனவேயாகும். இது தொடர்பில், ப.நா.நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக அமைப்பு போன்ற பல்புடை நிறுவனங்கள் மிக முக்கியமான வகிபாகத்தினை ஆற்ற வேண்டியுள்ளனவாகவுள்ள வேளையில், ஐக்கிய நாடுகளின் தலையீடுகள் உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவதன் தாக்கங்களைத் தவிர்ப்பதற்கான ஒத்துழைப்பு நடவடிக்கைக்காக உலகத் தலைவர்களின் அரசியல் கடப்பாடுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இன்றியமையாததாகவுள்ளன. IIஆம் உலகப் போரிலிருந்து காணப்படும் உலகளாவிய ஒருங்கிணைப்பினை மேலும் பலப்படுத்துவதற்கான தேவை அவர்களுக்கு காணப்படுகின்ற வேளையில் நாடுகளிடையே நம்பிக்கைப் பொறுப்பாண்மை பேணி வளர்க்கப்பட்டது. மேலும், உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவது தூண்டப்பட்டமையினால் ஏற்பட்ட அதிகளவு பாதிக்கப்படும் தன்மையினைக் கொண்ட நாடுகளுக்கு ஆதரவளிக்கின்ற உலகளாவிய நிதியியல் பாதுகாப்பு வலையமைப்பினை வலுப்படுத்துவதற்கான கூட்டுத்திட்டமொன்றினைக் கட்டமைப்பதற்கு பல்புடை முகவர்களுக்கு இது மிகுந்த வாய்ப்பான நேரமாகக் காணப்படுகிறது. அத்துடன், அரசியல் ரீதியாக பாதிக்கப்படக்கூடிய காலப்பகுதியில் தீவிரமான ஆதரவு தேடும் முயற்சிகள் காணப்பட்டமைக்கிடையிலும் கொள்கை வகுப்போருக்கு தீர்வொன்றாக உள்நோக்கிய கொள்கை அமைப்புக்களுக்கு திரும்புவதற்கு ஆதரவு தேடுகின்ற பாதுகாப்பாளர்களைக் கொண்ட குழுமங்களிலிருந்தான அனர்த்தங்களை எதிர்த்து நிற்கவேண்டிய அவசியம் காணப்பட்டது. பரந்தளவிலான உலகளாவிய கொள்கை கண்ணோட்டத்தில், உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவது, சுயாதீனத்தினை விட்டுக் கொடுக்காமல் கொள்கைகளிடையே ஒன்றிலொன்று தங்கியிருப்பதனை அங்கீகரித்துக் கொள்வதன் மூலம் நாடுகளிடையே பெருமளவு ஒற்றுமை தேவைப்படுகிறது.

**இலங்கைக்கான தாக்கங்கள்**

உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவதானது சவால்களையும் வாய்ப்புக்களையும் எடுத்துக்காட்டுகின்ற வேளையில், நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கும் இலங்கை அதன் பலத்தினை, குறிப்பாக அது அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் மற்றும் அதிகரித்துவரும் உலகளாவிய கொதிநிலை என்பனவற்றை அதற்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இந்து சமுத்திரத்தில் இலங்கையின் அமைவிடம், உலகளாவிய வல்லரசுகளின் குறிப்பாக, சீனா மற்றும் இந்தியா ஆகிய பிராந்திய வல்லரசுகளினதும் மோதல் நடவடிக்கைகளில் முக்கிய புவிசார் மையமாக மாற்றியிருக்கிறது. இலங்கை, சீனாவின் நாடா மற்றும் வீதி முன்னெடுப்பு நடவடிக்கைகள் போன்ற பிராந்திய மற்றும் உலகளாவிய வல்லரசுகளின் பல்வேறுபட்ட முன்னெடுப்புக்களில் அவர்களது உலகளாவிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புவிசார் அரசியல் செல்வாக்கினை விரிவுபடுத்துவதற்கு ஒரு பகுதியாக இருந்து வருகின்றது. இதன்படி, மேலும், துண்டாக்கப்படுவதனை நோக்கிய உலகளாவிய போக்கிற்கு மத்தியில் இலங்கை, ஏதேனும் உலகளாவிய வல்லரசுடன் இணைந்து கொள்வதனால் ஏற்படும் வேண்டத் தகாத விளைவுகளைத் தவிர்க்கும் விதத்தில் அதன் வெளிநாட்டு மற்றும் பன்னாட்டு பொருளாதாரக் கொள்கைகளை மிகக் கவனமாக வழிநடத்திச் செல்வதாக இருத்தல் வேண்டும். முன்னோக்கிச் செல்கையில், உலகளாவிய பொருளாதார அதிர்வுகளின் தாக்கத்தினைத் தணிக்கும் விதத்தில் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல், உற்பத்திகள் மற்றும் அவை சென்றடையும் நாடுகள் ஆகிய இரு நியதிகளிலும் ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தல், வர்த்தகத்துடன் தொடர்பான உட்கட்டமைப்பினையும் ஏற்பாடுகளையும் மேம்படுத்தல் என்பனவற்றை நோக்கி கொள்கைகளைக் கொண்டு செல்கின்ற வேளையில் உலகளாவிய வல்லரசுகளுடனும் முக்கிய முன்னணிப் பங்காளர்களுடனுமான உபாயம் மிக்க உறவுகளை உருவாக்கிக் கொள்ளுதலும்

வேண்டும். பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய அமைப்பு மற்றும் பல்துறை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு போன்ற கட்டமைப்புக்களூடாக பிராந்திய ஒத்துழைப்பினை வலுப்படுத்துகின்றமை நன்மையயப்பதாக இருக்கும். முக்கிய வர்த்தகப் பங்காளர் சிலருடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொண்டிருப்பது முக்கியமானதொரு அம்சமாக இருப்பதுடன், இலங்கை இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு உடன்படிக்கை உட்பட மேலும் ஒரு சில சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. முன்கூட்டியே செயற்பாடு சார்ந்த நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இலங்கையில் ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகளை தணிக்கக்கூடியதாக இருக்கின்ற வேளையில், துண்டாக்கப்படும் உலகளாவிய பொருளாதாரத் தோற்றப்பாடுகளிலிருந்து தோன்றிய புதிய வாய்ப்புக்களையும் பயன்படுத்தி வருகின்றது.

### முடிவுரை

தசாப்த காலங்களாக நீண்டு காணப்படும் விரைந்த உலகமயமாக்கல் மற்றும் எல்லை கடந்த ஒருங்கிணைப்பு என்பன இப்பொழுது மெதுவடைந்து வருவதுடன் பாதுகாப்பு பற்றிய நிர்ப்பந்தங்கள் உயர்வடைந்து வருகின்றன. எல்லை கடந்த பொருளாதார ஒருங்கிணைப்பின் அநுகூலங்களைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் உலகளாவிய பகிரப்பட்ட சுபீட்சத்தினை அடைந்து கொள்கின்ற பல்புடையாக்கத்தின் பொறுப்பினை உறுதிப்படுத்துவது அவசியமாகும். துண்டாக்கப்படுவது தொடர்பான நேரகாலத்துடனான சமிக்ஞைகள் உலகளாவிய பொருளாதாரத்தின் நலன்புரிகளுக்கு ஏற்படக்கூடிய தீங்குகளை ஏற்கனவே நிரூபித்திருக்கிறது. முன்னேற்றங்கள் எவரை விடவும் தாங்கமுடியாத துன்பநிலைக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கம் மானிடத்தின் இப்பரம்பரையினர் உலகளாவிய பிரச்சனைகள் உலகளாவிய தீர்வுகளை அவசியப்படுத்துவதனை நம்ப வைத்தல் வேண்டும். இதன்படி, சிதறிப்போகச் செய்வதிலும் பார்க்க, பெருமளவு மீளெழுச்சி மற்றும் தரம் என்பனவற்றிற்கு வழிவகுக்கின்ற கூட்டுமுயற்சிகளினூடாக பொருளாதார மீட்சியை விரைவுபடுத்தும் நோக்குடன் உள்ளக இணைப்புக்களைச் சிதைத்துவிடும் தன்மையினை பழையநிலைக்கு கொண்டு வருவதற்கான பன்னாட்டு அணுகுமுறை அவசியமானதாக இருக்கும். உறுதிப்பாட்டுப் பக்கத்தில் உலகளாவிய பொருளாதாரம் துண்டாக்கப்படுவதிலிருந்து தோன்றுகின்ற அநேக புதிய பல இடர்நேர்வுகளின் காரணமாக, அவற்றின் நாணயக் கொள்கைத் தாக்கங்களை முழுமையான இறை அணுகுமுறைகளின் மூலம் கட்டுப்படுத்துவது அவசியமாகும். உலகளாவிய பொருளாதாரம் உடைந்து போவதன் காரணமாகத் தோன்றுகின்ற புதிய சவால்களை நடத்திச் செல்வதற்கு பெருமளவு பல்புடை மயமாக்கல் பூரணமாக அவசியம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. கூடியளவிற்கு அதிர்வுகளைக் கொண்ட உலகளாவிய பொருளாதாரமொன்றில் சவால்களை எதிர்கொள்வதற்கான தனிப்பட்ட அணுகுமுறைகளிலும் பார்க்க கூட்டு முயற்சிகளே தற்பொழுது அவசர தேவையாகவுள்ளன.

### உசாத்துணைகள்:


1. Ahn, J., Carton, B., Habib, A., Malacrino, D., Muir, D., & Presbitero, A. (2023). Geoeconomic fragmentation and foreign direct investment. *IMF World Economic Outlook: A Rocky Recovery.*
2. Attinasi, M.-G., Boeckelmann, L. and Meunier, B. (2023), “Friend-shoring global value chains: a model-based assessment”, *Economic Bulletin*, ECB, Issue 2.
3. Bolhuis, M. A., Chen, J., & Kett, B. (2023). The costs of geoeconomic fragmentation. *FINANCE & DEVELOPMENT. International Monetary Fund, Washington DC.*
4. Ferroni, F., & Mojon, B. (2017). Domestic and global drivers of inflation in the euro area. *ECB Economic Bulletin*, (4), 72-96.
5. Garcia-Saltos, T. G., Ilyina, A., Kangur, A., Kunaratskul, T., Rodriguez, S., Ruta, M., & Trevino, J. P. (2023). Geoeconomic Fragmentation and the Future of Multilateralism. Staff Discussion Note, International Monetary Fund, Washington DC.
6. Goldberg, P. K., & Reed, T. (2023). Growing Threats to Global Trade. *FINANCE & DEVELOPMENT. International Monetary Fund, Washington DC.*
7. Lagarde, C. (2023). Central banks in a fragmenting world. Speech at the Council on Foreign Relations’ C. Peter McColough Series on International Economics. New York, 17 April 2023.
8. Lábaj, M., & Majzlíková, E. (2023). How nearshoring reshapes global deindustrialization, Economics Letters, Volume 230, 111239
9. The International Monetary Fund (2023): IMF Blog: The High Cost of Global Economic Fragmentation, Washington DC

# காலநிலை மாற்றம்: நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளும் விளைவுகளும்




எஸ். டி. ஜயநிதி
மூத்த உதவிப் பணிப்பாளர்
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

## 1. அறிமுகம்

காலநிலை மாற்றங்கள் முக்கிய இடர்நேர்வினைக் கொண்ட விடயமாக இனங்காணப்படுகின்றன. இவை நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றத்தை கடுமையாகப் பாதிக்கலாம்.[1] உலகளாவிய அல்லது பிராந்திய வானிலை முறைகளிலுள்ள நீண்டகால வேறுபாடானது காலநிலை மாற்றமாக அறியப்படுகின்றது. கடந்த சில தசாப்தங்களுக்கு மேலாக, உலகளாவிய காலநிலையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெற்று, வெப்பநிலையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள், தொடர்ச்சியான கடுங்குளிர், மற்றும் வெப்ப அலைகள், கடுமையான வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு, அதேபோன்று அதிகரித்துவரும் ஏனைய இயற்கை அனர்த்தங்கள் போன்ற மோசமான வானிலை நிகழ்வுகளினால் இனங்காணப்பட்டுள்ளன. காலநிலையில் உலகளாவிய மற்றும் பிராந்திய மாற்றங்கள் பல்வேறு தொழிற்துறைகளுக்கிடையிலும், மாறுபடுகின்ற தாக்கங்களை ஏற்படுத்துகின்ற அதேவேளை, நிதியியல் நிறுவனங்களுக்கும் அத்துடன் அவற்றினூடாக முன்னேற்றங்கண்ட, வளர்ந்துவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளுக்கிடையில் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

தற்போது, இரு முக்கிய காரணங்கள் காரணமாக நிதியியல் நிறுவனங்கள் காலநிலை இடர்நேர்வுகளுக்குள்ளாகியுள்ளன. முதலாவதாக, நிதியியல் நிறுவனங்கள் மிகவும் சிக்கல்மிக்கதாக விளங்குவதுடன் அவற்றின் பன்னாட்டு இருப்பை விரிவுபடுத்தியுள்ளன. எனவே, காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட விளைவுகளினால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கு தம்மை வெளிப்படுத்துகின்றன. இரண்டாவது, நிதியியல் நிறுவனங்களின் கிளை வலையமைப்புக்கள் மோசமான வானிலை நிலைமைகளைக்கொண்ட புவியியல் பிரதேசங்களுக்கு விரிவுபடுத்துகின்றமையினால், காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய இடர்நேர்வுகளுக்கான வளர்ச்சியடைந்து வரும் வெளிப்பாடு காணப்படுகின்றது. ஆகையினால், நிதியியல் நிறுவனங்களுக்கு இடர்நேர்வைத் தோற்றுவிக்கும் புதிய மூலமாக காலநிலை மாற்றம் விளங்குவதுடன் அத்தகைய மாற்றங்களுக்கான தாக்கம் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

இரு பிரதான இடர்நேர்வு தூண்டல்களின் மூலமாக நிதியியல் நிறுவனங்களை காலநிலை மாற்றம் பாதிக்கின்றது. அவை, பௌதீக மற்றும் மாறுதலடையும் இடர்நேர்வுகள் ஆகும். இது மரபுரீதியான நிதியியல் இடர்நேர்வுகள், அதாவது கொடுகடன், திரவத்தன்மை, சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் போன்ற வடிவங்களில் வெளிப்படுகின்றது.

கடுமையான வானிலை நிகழ்வுகள் மற்றும் நீடித்த சுற்றாடல் மாற்றங்கள் போன்றவற்றிலிருந்து தோன்றுகின்ற மக்களுக்கும் சொத்துக்களுக்கும் சேதத்தை விளைவிக்கின்றதாக பௌதீக இடர்நேர்வுகள் குறிப்பிடப்படுகின்ற அதேவேளை காலநிலை மாற்றத்திற்கு பதிலளிக்கும் வகையில் குறைந்த காபன் பொருளாதாரத்திற்கு மாற்றமடைவதுடன்

1 இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் நிதியியல் நிறுவனங்கள் வங்கிகளும் வைப்பு ஏற்கும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களாக குறிப்பிடப்படுகின்றன.

தொடர்புடைய அழுத்தங்களை மாறுதலடையும் இடர்நேர்வுகள் குறிக்கின்றன. காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை இனங்காண்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் நிதியியல் நிறுவனங்கள் தவறுமாயின், நிதியியல் நிறுவனங்களின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மை அதேபோன்று ஒட்டுமொத்த நிதியியல் முறைமையின் நலன் போன்றன மோசமாகப் பாதிக்கப்படக்கூடும்.

இப்பின்னணியைக் கருத்திற்கொண்டு, நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய இடர்நேர்வுகளின் பாதுகாப்பான மற்றும் ஆற்றல்வாய்ந்த முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு, காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளுடன் அவற்றின் இடர்நேர்வு முகாமைத்துக் கட்டமைப்புக்களை ஒருங்கிணைப்பதற்கு நிதியியல் நிறுவனங்கள் படிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, இக்கட்டுரையானது பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளது. பிரிவு 2இல், காலநிலை இடர்நேர்வுகளின் வகைகள் கலந்துரையாடப்படுகின்றதுடன் காலநிலை இடர்நேர்விலிருந்து நிதியியல் இடர்நேர்விற்கு ஊடுகடத்துதல் பிரிவு 3இல் கலந்துரையாடப்படுகின்றது. பிரிவு 4இல் வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான தாக்கங்களை உள்ளடக்குகின்றன. காலநிலை இடர்நேர்வை தற்போதுள்ள இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினுள் ஒருங்கிணைப்பதற்கான சாத்தியமான வழிகளுடன் இணைந்து, இலங்கை வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான வழக்கு மற்றும் இலங்கையின் நிதியியல் நிறுவனங்களினால் பின்பற்றப்படும் சிறந்த நடவடிக்கைகள் பிரிவு 5இல் கலந்துரையாடப்படும், அத்துடன் இறுதியாக பிரிவு 6இல் முடிவுரை தரப்பட்டுள்ளது.

## 2. காலநிலை இடர்நேர்வு தூண்டல் காரணிகள்

நிதியியல் இடர்நேர்வுகளை அதிகரிக்கக்கூடிய காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய காரணிகள் காலநிலை இடர்நேர்வு தூண்டல் காரணிகள் என அழைக்கப்படுகின்றன. உயர்ந்த மட்டத்தில், அத்தகைய காரணிகள், இரு பரந்தளவிலான வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அதாவது பௌதீக இடர்நேர்வு மற்றும் மாறுதலடையும் இடர்நேர்வு என்பனவாகும். இவ்விரு வகைகளும் காலநிலையுடன் தொடர்புடைய மாறுதல்களை நிதியியல் இடர்நேர்வுகளாக மாற்றமடையச் செய்து நிதியியல் முறைமையின் பாதுகாப்பனதும் ஆற்றல்வாய்ந்ததன்மையையும் பாதிக்கின்றன.

### 2.1 பௌதீக இடர்நேர்வுகள்

பௌதீக இடர்நேர்வுகள் என்பது வானிலை மற்றும் காலநிலை ஆகிய இரண்டிலும் ஏற்படும் மாற்றங்கள் ஆகும். இது நிதியியல் முறைமையையும் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் பாதிக்கும். தீவிர வானிலை நிகழ்வுகளின் (சூறாவளி, அடைமழை, வெள்ளம், மற்றும் பிற இயற்கை பேரழிவுகள்) திடீர் வெளிப்பாடுகளால் அதிகரிக்கும் பௌதீக இடர்நேர்வுகள் கடுமையான பௌதீக இடர்நேர்வுகள் என அழைக்கப்படுகின்ற அதேவேளை, காலநிலையில் ஏற்படும் படிப்படியான மாற்றங்கள் (கடல் மட்டம் உயர்வடைதல், வெப்பநிலையில் நீடித்த அதிகரிப்பு, நீடித்த வெப்ப அலைகள், அல்லது பாலைவனமாக்கல்) நீடித்த பௌதீக இடர்நேர்வுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடர்நேர்வுகள் தோன்றுவதற்கு நீண்ட நேரம் எடுக்கக்கூடும் என்பதுடன் ஒவ்வொரு வகை இடர்நேர்வினதும் பரவலடையும் தன்மை மற்றும் தீவிரமடையும் தன்மையை அனுமானிப்பது மிகவும் சிக்கல்மிக்கதாக காணப்படுகின்றது. எதுஎவ்வாறெனினும், நிதியியல் முறைமைகள் மீது ஏற்பட்ட தாக்கத்தின் முக்கியத்துவமானது முன்னேறிய, வளர்ந்துவரும், மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு மத்தியில் வேறுபட்டு காணப்பட்டபோதிலும் கூட அத்தகைய நிகழ்வுகள் நிதியியல் சொத்துக்களுக்கு பௌதீக சேதங்களை ஏற்படுத்தலாம், நிரம்பல் சங்கலிகளை சீர்குலைக்கலாம், மற்றும் கடன்களை அதிகரிக்கச்செய்யலாம், பொருளாதாரங்களின் வீச்சில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

ஒன்றில் காலநிலை பதட்டங்களுக்கு உட்படுகின்ற நிறுவனம், தனிப்பட்ட மற்றும் பன்னாட்டு வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக வெளிப்படுத்துவதன் மூலமாகவோ அல்லது ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் மீது காலநிலை மாற்றத்தின் தாக்கம் மற்றும் நிதியியல் முறைமைக்கான அவற்றின் தாக்கங்கள் மூலமாகவோ நிதியியல் நிறுவனங்களுக்க ஏற்படும் இடர்நேர்வுகள் நேரடியாக வெளிப்படும். கடன் புத்தகங்களில் அதிகரித்த செலுத்தத்தவறுதல் இடர்நேர்வுகளையும் அத்துடன்/அல்லது சொத்து பெறுமதிகளில் வீழ்ச்சிகளையும் இவை உள்ளடக்குகின்றன.

### 2.2 மாறுதலடையும் இடர்நேர்வுகள்

குறைந்த காபன் பொருளாதாரத்தின் செயன்முறையில் மாறுதலடையும் இடர்நேர்வுகள் தோற்றம்பெறுகின்றதுடன் கொள்கைகள், ஒழுங்குவிதிகள், தொழில்நுட்பங்கள், மற்றும் வாடிக்கையாளர் முன்னுரிமைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. இத்தகைய மாற்றங்கள் பரந்தளவிலான நிதியியல் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு தூண்டி, அவற்றின் பெறுமதிகளை குறைப்பதற்கு எத்தணிக்கலாம். எனினும், மாறுதலடையும் இடர்நேர்வின் அளவு மாற்றத்தின் கால அளவைப் பொறுத்து காணப்படுகின்றது. இங்கு மாற்றத்தை படிப்படியாகவும் நல்ல நேரத்திலும் செய்கின்றபோது, இடர்நேர்வு குறைவாக இருக்கும். புறம்பாக, திடீரென மாற்றம் ஏற்படுமாயின் இடர்நேர்வு உயர்வானதாக இருக்கும்.

குறிப்பாக வலு, போக்குவரத்து மற்றும் தயாரிப்பு துறைகளில் இயங்குகின்ற காபன் சேர்மங்களின் அளவைக் குறைத்தலிலிருந்து (de-carbonization) தோன்றுகின்ற இழப்புக்களுக்கு உட்படுகின்ற நிறுவனங்களில் வெளிப்படுத்தல்கள் மற்றும் திரட்சிகள் என்பனவற்றின் காரணமாக மாறுதலடையும் இடர்நேர்வானது பிரதானமாக நிதியியல் நிறுவனங்களைப் பாதிக்கின்றது.

பௌதீக மற்றும் மாறுதலடையும் இடர்நேர்வுகளின் அளவு மற்றும் அவற்றின் ஒன்றுக்கொன்று தங்கியிருத்தலானது காலநிலை மாற்றத்தின் போக்கினால் மாத்திரமன்றி அத்தகைய இடர்நேர்வுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாலும் தீர்மானிக்கப்படும். உதாரணமாக, காலநிலை மாற்றத்திற்கான திடீர் மற்றும் எதிர்பாக்கப்படாத கொள்கைப் பதிலிறுப்புக்கள் பௌதீக இடர்நேர்வினைக் கட்டுப்படுத்தலாம் என்பது குறைந்த காபன் பொருளாதாரத்திற்கு ஒழுங்கற்ற மாற்றத்தை விளைவிக்கும். இது குறுகிய காலத்தில் குறித்த மாறுதலடையும் இடர்நேர்வுகளின் பொருள்மயமாக்கலைத் தூண்டலாம். அத்தகைய சீராக்கங்களை தவிர்க்கின்ற அல்லது பிற்போடுகின்ற போது, மறுபுறத்தில், குறுகிய காலத்தில் அத்தகைய பொருள்மயமாக்கத்தை தடுக்கலாம் இருப்பினும் உமிழ்வுகளில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்புக்கள் பௌதீக இடர்நேர்வுகளின் அதிகரித்த வெளிப்பாடுகளுக்கு வழிவகுக்கலாம். மேலும், சில சந்தர்ப்பங்களில், சம காலத்தில் பௌதீக மற்றும் மாறுதலடையும் இடர்நேர்வுகள் ஒன்றிணைந்து தெளிவாகத் தோன்றலாம்.

### 3. காலநிலை இடர்நேர்விலிருந்து நிதியியல் இடர்நேர்விற்கு ஊடுகடத்தல்


பௌதீக மற்றும் மாறுதலடையும் இடர்நேர்வு ஆகிய இரு தூண்டல் காரணிகளும் ஊடுகடத்தல் வழிமுறைகளான நேரடி மற்றும் நேரடியற்ற வகையினூடாக காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளாக மாற்றமடைகின்றதுடன் கொடுகடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் போன்ற மாறுதலடையும் இடர்நேர்வு வகைகளில் வெளிப்படுகின்றன.

நேரடி ஊடுகடத்தல் வழிமுறைகள் பேரண்ட பொருளாதார ஊடுகடத்தல் வழிமுறைகள் எனவும் குறிப்பிடப்படுகின்றன. காலநிலை தூண்டல் காரணிகளினால் நிதியியல் நிறுவனங்களின் தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் அல்லது இணைத்தரப்பினர்கள் பாதிக்கப்படுவதற்கு காரணமான இணைப்புக்களை உள்ளடக்கி, காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளுக்கு ஒட்டுமொத்தமாக நிதியியல் நிறுவனங்களும் நிதியியல் முறைமையும் சாத்தியமாக வெளிப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, காலநிலையுடன் தொடர்புடைய காரணிகளின் விளைவாக நிதியியல் நிறுவனங்கள் தமது நாளாந்த தொழிற்பாடுகள் அல்லது அவற்றின் நிதியத்தை திரட்டும் ஆற்றல் (பிசிபிஎஸ், 2021) ஆகியவற்றால் ஏற்படும் தாக்கங்களால் எழும் நேரடி விளைவுகள் இதில் அடங்குகின்றன.

காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வு தூண்டல் காரணிகள் தொழிலாளர் உற்பத்தித்திறன் மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்ற பேரண்டபொருளாதார காரணிகளைப் பாதிக்கும் பொறிமுறைகள் மற்றும் இதன்மூலம் நிதியியல் நிறுவனங்கள் மீது தாக்கத்தைக் கொண்டிருத்தல் நேரடியற்ற அல்லது பேரண்டபொருளாதார ஊடுகடத்தல் வழிமுறைகள் என அழைக்கப்படுகின்றன (பிசிபிஎஸ், 2021). மேலும், இடர்நேர்வற்ற வட்டி வீதங்கள், பணவீக்கம், பண்டங்கள், மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள் போன்ற பேரண்டபொருளாதார சந்தை மாறிகள் மீதான தாக்கங்கள் பேரண்டபொருளாதார ஊடுகடத்தல் வழிமுறைகளினூடாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. காலநிலை இடர்நேர்விலிருந்து நிதியியல் இடர்நேர்விற்கு மாறுதலடைகின்ற வழிமுறைகளின் விபரங்கள் கீழேயுள்ள வரைபடத்தில் தரப்பட்டுள்ளது.

வரைபடம் 1 மாறுதலடையும் வழிகளை எடுத்துக்காட்டுகின்றதுடன் பௌதீக இடர்நேர்வு தூண்டல்

வரைபடம் 1: காலநிலை இடர்நேர்வுகளை நிதியியல் இடர்நேர்விற்கு ஊடுகடத்தல்




*மூலம்: காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வு தூண்டல் காரணிகள் மற்றும் அவற்றின் ஊடுகடத்தல் வழிமுறைகள், வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழு*

காரணிகள் நிதியியல் இடர்நேர்விற்கு மாறுதலடைகின்றன (பிசிபிஎஸ்,2021). பௌதீக (கடுமையான மற்றும் நீடித்த) மற்றும் மாறுதலடையும் இடர்நேர்வு தூண்டல் காரணிகள் (வரைபடம் 1இல் நிரல் 1) பல்வேறு நுண்பாகபொருளாதார மற்றும் பேரண்டப் பொருளாதார ஊடுகடத்தல் வழிமுறைகளினூடாக (வரைபடம் 1இல் நிரல் 2) நிதியியல் நிறுவனங்களை தாக்குகின்றன. மேலும், ஏனைய மாறிகளின் அல்லது மூலங்களின் வகை (வரைபடம் 1இல் நிரல் 2) நிதியியல் நிறுவனங்களின் இத்தகைய தாக்கமொன்றின் சாத்தியத்தையும் அளவையும் பாதிக்கலாம். இறுதியாக, நிதியியல் நிறுவனங்கள் மீதான காலநிலை இடர்நேர்வு தூண்டல் காரணிகளின் தாக்கங்கள் அவற்றினால் எதிர்நோக்கப்படும் வழக்கமான இடர்நேர்வு வகைகள் அதாவது கொடுகடன், சந்தை, திரவத்தன்மை, மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் போன்றவற்றின் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றன (வரைபடம் 1இல் நிரல் 3).

## 4. வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான தாக்கங்கள்

கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, தொழிற்பாட்டு மற்றும் நற்பெயர்சார்ந்த இடர்நேர்வு போன்றவற்றினூடாக காலநிலை இடர்நேர்வு தூண்டல் காரணிகள் நிதியியல் நிறுவனங்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பது தொடர்பில் இப்பிரிவு எடுத்துரைக்கின்றது.

### 4.1 கொடுகடன் இடர்நேர்வு

தீவிர காலநிலை நிகழ்வுகள் வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு கணிசமான இழப்புக்களை ஏற்படுத்தி அவர்கள் கடன்களை தீர்ப்பனவு செய்வதற்கான ஆற்றலைப் பாதிக்கலாம் (வருமானத் தாக்கம்) அதேபோன்று பிணையங்களாக உறுதியளிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியையும் பாதிக்கலாம் (சொத்து முகாமைத்துவம்). கொடுகடன் செலுத்தத்தவறுதல்களின் உயர்ந்தளவான சாத்தியத்தன்மைக்கமைவாக நிதியியல் நிறுவனங்களுக்கான கொடுகடன் இடர்நேர்வில் அதிகரிப்பொன்றுக்கும் பிணையங்களின் மீட்டெடுக்கக்கூடிய பெறுமதியில் வீழ்ச்சியொன்றுக்கு இது வழிவகுக்கின்றது. இதைப்போன்று, படிப்படியான காலநிலை மாற்றங்கள் பொருளாதார செயலாற்றத்தை பலவீனப்படுத்துவதன் மூலம் கடன் நம்பகத்தன்மையையும் பிணையுறுதி பெறுமதிகளையும் நலிவடையச் செய்யக்கூடும். மேலும், இத்தகைய வியாபாரங்கள் இலாபங்கள் மற்றும் வியாபார தடைகளில் வீழ்ச்சிகளை அனுபவகிக்கின்றதனால், குறைந்த காபன் பொருளாதாரத்திற்கு மாற்றமடைவதற்கு வியாபார மாதிரிகள் பொருந்தாத வியாபாரங்களுக்கு

நிதியியல் நிறுவனம் வெளிப்படுத்தலைக் கொண்டிருந்தால், கொடுகடன் இடர்நேர்வு உயர்வடையலாம். இதன்மூலம் அவர்களின் கடன் செலுத்தத்தவறுகைகளின் சாத்தியப்பாடு அதிகரிக்கக்கூடும்.

மேலும், காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பௌதீக தீங்குகள் கடன் இழப்புக்களை ஏற்படுத்தலாம். இத்தகைய பௌதீக தீங்குகள் அவர்களின் மீள்கொடுப்பனவு இயலாற்றலை பெறுமதியழக்கச்செய்து, குடும்பங்கள், நிறுவனங்கள், மற்றும் நாடுகள் ஆகியவற்றின் பௌதீக மூலதனத்திற்கு (வீடமைப்பு, இருப்பு, ஆதனம், உபகரணம் அல்லது உட்கட்டமைப்பு) சேதப்படுத்தலாம் அல்லது அழிக்கலாம். இறுதியாக, பௌதீக மற்றும் மாறுதலடையும் காலநிலை இடர்நேர்வு தூண்டல் காரணிகள் நிதியியல் முறைமையில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தலாம். இது முதலீட்டு பெறுமதியைக் குறைத்து, கடன்ஈவோன் மற்றும் ஏனைய நிதியியல் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு கொடுகடன் இடர்நேர்வுகளை உயர்த்தக்கூடும்.

### 4.2 சந்தை இடர்நேர்வு

காலநிலை இடர்நேர்வு காரணிகள் நிதியியல் சொத்துக்களின் பெறுமதியை குறிப்பிடத்தக்களவில் பாதிக்கின்றது. எதிர்கால கடுமையான வானிலை நிகழ்வுகள் மற்றும் ஏனைய இயற்கை பேரழிவுகளின் கால அளவு, தீவிரத்தன்மை, மற்றும் இடத்துடன் கூடிய நிச்சயமற்ற தன்மை காரணமாக நிதியியல் சந்தைகள் மிகவும் தளம்பலடையக்கூடியதாக மாறக்கூடும். குறிப்பாக, பௌதீக மற்றும் மாறுதலடையும் இடர்நேர்வுகள் எதிர்கால பொருளாதார நிலைமைகள் அல்லது உண்மை அல்லது நிதியியல் சொத்துக்களின் பெறுமதி தொடர்பாக புதிய தகவல்களை மாற்றலாம் அல்லது வெளிப்படுத்தலாம். இது மோசமான விலை அதிர்வுகள் மற்றும் வர்த்தகப்படுத்தப்பட்ட சொத்துக்களுக்கான அதிகரிக்கப்பட்ட சந்தை தளம்பலையும் தோற்றுவிக்கும். இதற்குமேலதிகமாக, காலநிலை இடர்நேர்வுகள் சொத்து தொடர்புகளில் சாத்தியமான இடையூறுகளை விளைவித்து, பாதுகாப்பின் காத்திரத்தன்மையைக் குறைப்பதுடன் நிதியியல் நிறுவனங்கள் தாம் எதிர்கொள்ளும் இடர்நேர்வுகளை முனைப்புடன் முகாமைசெய்வதற்கு அவற்றின் ஆற்றலுக்கு சவால்களை ஏற்படுத்தலாம். எனினும், நிதியியல் சொத்துக்களின் பெறுமதியில் காலநிலை இடர்நேர்வு ஏற்கனவே காரணியாக இருக்கும் போது, எதிர்பாக்கப்படாத விலை அசைவுகளின் சாத்தியப்பாடு குறைவானதாகவிருக்கலாம்.

மறுபுறத்தில், குறைந்த காபன் பொருளாதாரத்திற்கு மாறுதலடைதலானது கொள்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள், பொருளாதார முகவர்களின் முன்னுரிமைகளிலுள்ள மாறுபாடுகள், மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகள் காரணமாக சொத்துக்களின் கணிசமான மற்றும் திடீர் மீள்விலையிடலுக்கு (முறிகள், பங்குகள் போன்றன) வழிவகுக்கலாம். வரவிருக்கும் ஒழுங்குவிதிகள் அல்லது தொழில்நுட்ப மேம்பாடுகளுக்கான வாடிக்கையாளர், வியாபார மற்றும் முதலீட்டாளர் எதிர்பார்க்கைகளில் காணப்படும் மாற்றங்கள் காரணமாகவும் சொத்துக்களின் பெறுமதியிலுள்ள கணிசமானளவு மாற்றங்கள் இடம்பெறலாம். எனவே, நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிலுள்ள வீழ்ச்சிகளில் காணப்படும் இடர்நேர்வின் விளைவாக நிதியியல் நிறுவனங்கள் மற்றும் சொத்து உடைமையாளர்கள் இழப்புக்களை எதிர்கொள்ளக்கூடும்.

நிதியியல் சொத்துக்கள் மீதான எதிர்கால வருவாய்களின் நிச்சயமற்ற தன்மையின் மூலம் எடுத்துச்செல்லப்பட்ட இடர்நேர்வு மிகையில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்புக்களின் விளைவாக சந்தை இடர்நேர்வும் உயர்வடையலாம். மேலும், தீவிரமான வானிலை நிகழ்வுகள் தொடர்ந்து இடம்பெறுதல் காலநிலையினால் பாதிக்கப்படக்கூடிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் உண்மையானதும் சாத்தியமானதுமான வீதத்தை கடுமையாகப் பாதிக்கலாம். இதனால், சந்தைகளுக்கான கடன்பெறுதல் மற்றும் மட்டுப்படுத்தல் பெறுவழியின் செலவு அதிகரிப்பதன் மூலம் நாட்டிற்கான படுகடனின் பெறுமதியையும் பாதிக்கலாம்.

### 4.3 திரவத்தன்மை இடர்நேர்வு

ஒன்றில் அவசரகால நிதியத்தை அல்லது திரவத்தன்மை சொத்துக்களை அணுகுவதற்கு இயலாமை அல்லது வாடிக்கையாளர்களின் மூலம் அதிகப்படியான வைப்புத்தொகையை எடுப்பனவு செய்வதன் மூலமாக மறைமுகமாகவும காலநிலை இடர்நேர்வு காரணிகள் நிதியியல் நிறுவனங்களின் திரவத்தன்மை இடர்நேர்வு மீது உடனடியாக செல்வாக்கு செலுத்தலாம். மேலும், இத்தகைய காரணிகள் சொத்து வளர்ச்சிக்கு நிதியளிப்பதற்கான நிதியியல் நிறுவனங்களின் இயலாற்றலைப் பாதிக்கலாம் அல்லது இழப்புகள் ஏற்படாமல் உடனடியாக கடமைகளை நிறைவேற்றலாம். மேலும், வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் பௌதீக ரீதியிலான காலநிலை இடர்நேர்வுகள் நிதியியல் நிறுவனங்கள் மீதான திரவத்தன்மை அழுத்தங்களை

உருவாக்கலாம் மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகள் தோன்றலாம். இங்கு வாடிக்கையாளர்கள் வைப்புக்களை எடுப்பனவு செய்யலாம் அல்லது அறவிடுவதற்கு தேவையான காசுப்பாய்ச்சலுக்கு நிதியிடுவதற்கான கொடுகடன் தொடர்களைப் பிரயோகிக்கலாம்.

### 4.4 தொழிற்பாட்டு மற்றும் நற்பெயர்சார்ந்த இடர்நேர்வுகள்

கிளை வலையமைப்புக்கள், அலுவலகங்கள், உட்கட்டமைப்பு, செயன்முறைகள், மற்றும் பொது மக்கள் உள்ளடங்கலாக வியாபார தொடர்ச்சி கடுமையான வானிலை நிலைமைகளினால் பாதிக்கப்படலாம் என்பதால் காலநிலை இடர்நேர்வானது தொழிற்பாட்டு இடர்நேர்வொன்றாக நிதியியல் நிறுவனங்களை நேரடியாகப் பாதிக்கலாம். உதாரணமாக, பௌதீக தீமைகள் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பூட்டல் உட்கட்டமைப்பிற்கு பாதிப்பினை ஏற்படுத்துமாயின், நிதியியல் நிறுவனங்களின் தொழிற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்படலாம். காலநிலை உணர்திறன் கொண்ட முதலீடுகள் மற்றும் கடன்வழங்குதலின் விளைவாக, நிதியியல் நிறுவனங்கள் அதிகரித்துவரும் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்பு இடர்நேர்வுகளையும் எதிர்கொள்ளக்கூடும்.

மேலும், குறைந்த காபன் பொருளாதாரத்திற்கு மாறுதலடைகின்ற இலக்குகளுடன் நிதியியல் நிறுவனங்கள் போதியளவு அணிசேர்க்கப்படவில்லை என வாடிக்கையாளர்களும் முதலீட்டாளர்களும் நம்பிக்கை வைப்பார்களாயின், மாறுதலடையும் இடர்நேர்வு நன்மதிப்புபெற்ற இடர்நேர்வொன்றாக வெளிப்படலாம்.

## 5. இலங்கை வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்புடைய விடயங்கள்

தொடர்ச்சியான இயற்கை பேரழிவுகள், காடழிப்புக்கள் மற்றும் வனச் சீர்குலைவு, கரையோர மற்றும் கடல்சார் சுற்றுச்சூழல் சீரழிவு, காலநிலை மாற்றம் மற்றும் கடுமையான வானிலை, காற்று மற்றும் நீர் மாசடைதல், மற்றும் உயிர் பல்லினத்தன்மை இழப்பு போன்றவற்றால் இலங்கை வளர்ந்துவரும் மற்றும் காலநிலை சவால்களை எதிர்கொள்கின்றது (இ.ம.வ, 2019). ஆகையினால், குறைந்த காபன், காலநிலை தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை, மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு நிலையான பொருளாதாரமாக மாறுவதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, 2019இல் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் நிலைபெறத்தக்க நிதிக்கான வழிகாட்டலில் எடுத்துரைக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையை நிறைவேற்றும் வகையில், இலங்கை மத்திய வங்கியானது 2022 மே 06 அன்று இலங்கை பசுமை நிதிப் பகுப்பியலை தொடங்கிவைத்தது.

மேலும் ஒருபடி முன்னேறும் வகையில், நிலைபெறத்தக்க பொருளாதாரத்தை உறுதிப்படுத்தி, இலங்கை மத்திய வங்கியின் நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டலுக்கமைவாக உரிமம்பெற்ற வங்கிகளின் நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதை இலக்காகக்கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது உரிமம்பெற்ற வங்கிகளின் நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் மீது 2022ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையை வழங்கியது.

இதைப்போன்று, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகளுக்கான ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை தாபிக்கும் பொருட்டு, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் தொடர்பான வழிகாட்டல்கள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளரின் மூலம் 2022ஆம் ஆண்டு நவெம்பர் 29அன்று வெளியிடப்பட்டன.

எது எவ்வாறெனினும், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்குப் பதிலாக, காலநிலை இடர்நேர்வுகளுக்கான நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை அதிகரிப்பதற்கான பசுமை நிதிக் கொள்கைகள், சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வு முகாமைத்துவ உபாயங்கள் மற்றும் முறைகளை உருவாக்குவதில் வங்கிகளும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளும் முக்கியப் பங்காற்றுகின்ற அதேவேளை குறைந்த காபன் பொருளாதாரத்திற்கு அல்லது நிகர பூச்சிய பொருளாதாரத்திற்கு மாறுதலடைவதற்கு பேணிவளர்க்கின்றன. அதே சமயத்தில், வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகள் தற்போதுள்ள நியம இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினுள் மதிப்பிடப்பட்டு, கண்காணிக்கப்பட்டு அத்துடன் கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிசெய்வது இன்றியமையாததாகும்.

## 5.1 தற்போதுள்ள இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்புடன் காலநிலை இடர்நேர்வினை ஒருங்கிணைத்தல்

வியாபார உபாயம், ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு, சபையினால் அனுமதியளிக்கப்பட்ட இடர்நேர்வு ஏற்பு (சளைம யீநவவைந)இ குழுக் கட்டமைப்புக்கள், மற்றும் கணியம்சார் மற்றும் பண்புசார் ஆகிய இரு வழிமுறைகளைப் பயன்படுத்தி அனைத்து மூன்று நிலை பாதுகாப்புக்களிலும் உள்ளடங்கிய காலநிலை மாற்றத்தின் நிதியியல் இடர்நேர்வினை முகாமைசெய்வதற்கான மூலோபாய அணுகுமுறையொன்றை தாபிப்பதில் இலங்கையின் நிதியியல் நிறுவனங்கள் கவனம்செலுத்துகின்றன. எனவே, அவர்கள் தமது வியாபாரத்திற்கு விகிதாசாரமுறையில் அத்தகைய இடர்நேர்வுகளை வெளிப்படுத்துவதைக் கண்டறிந்து மதிப்பிடலாம், கண்காணிக்கலாம், முகாமைசெய்யலாம் மற்றும் அறிக்கையிடலாம் என்பதுடன் முகாமைத்துவதத் தகவல்கள் மற்றும் பணிப்பாளர் சபைக்கான இடர்நேர்வு அறிக்கைகளில் அப்பெறுபேறுகளைச் சேர்க்கலாம். காத்திரமான காலநிலை இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம:

- முக்கிய காலநிலை இடர்நேர்வு தூண்டல் காரணிகளை அவற்றின் ஊடுகடத்தல் வழிமுறைகளுடன் இனங்காணுதல்
- ஒட்டுமொத்த இடர்நேர்வு கட்டமைப்பிற்கமைவாக காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளுக்கான நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட கணியம்சார் இடர்நேர்வு ஏற்பு அறிக்கையை உருவாக்கி, நிதியியல் நிறுவனத்தின் வியாபார உபாயம், வியாபார மாதிரி மற்றும் ஐந்தொகை போன்றவற்றுடன் அணிசேர்த்தல்
- முன்மதியுடைய அனுமானங்கள் மற்றும் பதலீடுகளை தாபிப்பதன் மூலம் அழுத்த பரிசோதனை மற்றும் ஏனைய வேறு மாதிரியாக்கப் பயிற்சிகளில் இத்தகைய இடர்நேர்வுகளுக்கு நிதியை வழங்குவதன் மூலம் காலநிலை இடர்நேர்வுகளை திட்டமிட்டு அளவிடுதல்

### 5.1.1 காலநிலை இடர்நேர்வினை முகாமைசெய்வதற்கான அணுகுமுறைகளை மேம்படுத்துதல்

பின்வரும் சிறந்த நடைமுறைகள் (PRA, 2019), காலநிலை இடர்நேர்வை பரந்தளவிலான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை மற்றும் தொடர்புபட்ட ஆளுகை மற்றும் கட்டுப்பாட்டு கட்டமைப்புக்களை ஒருங்கிணைப்பதற்கான அணுகுமுறைகளை உருவாக்கி மேம்படுத்துவதில் இலங்கையின் நிதியியல் நிறுவனங்களுக்கு வழிகாட்ட முடியும்.

#### அ) ஆளுகை

காலநிலையுடன் தொடர்புடைய நிதியில் இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்கு காலநிலை ஆளுகையின் காத்திரமான மட்டத்தை நடைமுறைப்படுத்துவது முக்கியமானதாக விளங்குகின்றது. எனவே, எதிர்காலத்தில் நிகழக்கூடிய இடர்நேர்வுகள் குறித்த போதுமான நீண்டகால முன்னோக்கு உள்ளடங்கலாக காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளின் வெவ்வேறான கூறுகள் மீதான வலுவான பணிப்பாளர் சபையும் நிறைவேற்று மேற்பார்வையும் காலநிலை இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை உருவாக்குவதற்கு இன்றியமையாதவையாகும். மேலும், நிதியியல் நிறுவனத்தின் ஒட்டுமொத்த வியாபார உபாயம் மற்றும் இடர்நேர்வு ஏற்பு போன்றவற்றுள் அவர்கள் இத்தகைய இடர்நேர்வுகளை நிவர்த்திசெய்து மேற்பார்வை செய்தல் வேண்டும், அதேவேளை இடர்நேர்வினைப் புரிந்துகொண்டு முகாமைசெய்வதற்கான பொருத்தமான கொள்கைகள், அணுகுமுறைகள், மற்றும் செயன்முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இதற்குமேலதிகமாக, பொருத்தமான முக்கிய முகாமைத்துவ பணியாளர்களுக்கு காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை நிவர்த்திசெய்வதற்கான பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என்பதுடன் போதியளவு காலநிலை சார்ந்த ஆற்றல்களின் கிடைக்குந்தன்மையை உறுதிசெய்து காலப்போக்கில் நிபுணத்துவம்பெறச் செய்வதற்கு பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

#### ஆ) இடர்நேர்வு அடையாளப்படுத்தலும் அளவிடுதலும்

காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளின் அனைத்தையுமுள்ளடக்கிய புரிந்துணர்வு மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வியாபார மாதிரிகளை இத்தகைய இடர்நேர்வுகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பது இத்தகைய இடர்நேர்வுகளை முகாமைசெய்வதில் மிக முக்கிய விடயமாக கருதப்படுகின்றது. எனவே, காலநிலை மாற்றத்தின் குறுகிய மற்றும் நீண்ட கால நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடுசெய்வதற்கு, நிதியியல் நிறுவனங்கள் சூழ்நிலைப் பகுப்பாய்வு மற்றும் அழுத்தப் பரிசோதனை போன்ற

உத்திகளைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, ஒட்டுமொத்த இடர்நேர்வு தோற்றப்பாடு மற்றும் வியாபார உபாயம் போன்றவற்றின் மீது காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளின் தாக்கத்தை மதிப்பீடுசெய்வதற்கும் அதேபோன்று காலநிலையுடன் தொடர்புடைய பல்வகையான பெறுபேறுகளுக்கான நிதியியல் வியாபாரங்களின் பாதிக்கப்படக்கூடியதன்மைகள் மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையையும் புரிந்துகொள்வதற்கும் சூழ்நிலை பகுப்பாய்வானது அதிகம் நாடிச்செல்லக்கூடிய முறைகளில் ஒன்றாகும்.

அதேசமயத்தில், சூழ்நிலைப் பகுப்பாய்வுடன் தொடர்புடைய சாத்தியமான தெளிவற்ற தன்மைகள் தொடர்பில் கவனம்செலுத்தப்பட்டு முன்மதியுடைய அனுமானங்கள், உணர்வுபூர்வமான பகுப்பாய்வு, அல்லது கைமுறையிலான சீராக்கம் போன்றவற்றின் மூலம் நிவர்த்திசெய்யப்பட வேண்டும். மேலும்,இடர்நேர்வு மதிப்பீடுகளை முன்னெடுப்பதில் வரலாற்று தரவுகளில் தங்கியிருத்தலுக்கு மேலதிகமாக அத்தகைய சாத்தியமான சூழ்நிலைகள் தொடர்பாக ஒருவருக்கொருவர் அறிந்திருப்பது மூலம் நிதியியல் நிறுவனங்கள் பேரழிவு மாதிரியாக்கலில் (modeling) சாத்தியமான எதிர்கால போக்குகளைக் கருத்திற்கொண்டு மேலும் ஒரு படி முன்னேறலாம்.

**இ) இடர்நேர்வு கண்காணிப்பு**

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் நிதியியல் இடர்நேர்வுகளைக் கண்காணிப்பதற்கு நிதியியல் நிறுவனங்கள் பல்வேறு கணியம்சார் மற்றும் பண்புசார் கருவிகளையும் அளவீடுகளையும் பின்பற்றலாம். உதாரணமாக, காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வு காரணிகளின் வெளிப்பாடுகளைக் கண்காணிப்பதற்கு இவை பயன்படுத்தப்படலாம். இது நிதியியல் நிறுவனங்களின் கடன்வழங்குதல் அல்லது முதலீட்டு சொத்துப்பட்டியலின் திரட்சியில் மாற்றங்களிலிருந்து அல்லது பௌதீக இடர்நேர்வு காரணிகளின் சாத்தியமான தாக்கத்திலிருந்து தோன்றலாம். மேலும், இவ்வளவீடுகளும் கருவிகளும் தொடர்ந்தும் அனுபவத்துடன் வளர்ச்சியடைதல் வேண்டும்.

**ஈ) இடர்நேர்வு முகாமைத்துவமும் தணித்தலும்**

நிதியியல் இடர்நேர்வுகள் சூழ்நிலை பகுப்பாய்வின் மூலம் பொருண்மியம் என்று கருதப்படுகின்றபோதும் அந்நிதியியல் இடர்நேர்வுகள் எவ்வாறு தணிக்கப்படும் என்பதை வெளிப்படுத்தவும் காலநிலை மாற்றத்திலிருந்து சாத்தியமான நிதியியல் இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்கு நிதியியல் நிறுவனங்கள் நம்பகமான உபாயங்களை அல்லது கொள்கைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இதுபோன்ற இடர்நேர்வுகளின் திரட்சி மற்றும் தாக்கத்தைக் குறைப்பதற்கு நிதியியல் நிறுவனங்கள் எடுக்கின்ற முயற்சிகளும் இதில் அடங்கும். மேலும், காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் நிதியியல் இடர்நேர்வுகளின் தனித்துவமான கூறுகளைத் திட்டங்கள் உள்ளடக்குதல் வேண்டும். இது ஏனைய இடர்நேர்வுகளிலிருந்து வேறுபடலாம்.

**உ) இடர்நேர்வினை அறிக்கையிடுதலும் முகாமைத்துவத் தகவல்களும்**

முன்மொழியப்பட்ட தணிப்பு நடவடிக்கைகளும் அந்நடவடிக்கைகளுக்கான கால அளவுகளுடனும் இணைந்து, சூழ்நிலைப் பகுப்பாய்வு அல்லது வேறு ஏதேனும் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளுக்கான நிதியியல் நிறுவனங்களின் வெளிப்பாடு குறித்து பணிப்பாளர் சபைக்கும் ஏனைய துணைக்குழுக்களுக்கும் முகாமைத்துவ தகவல்கள் வழங்கப்பட வேண்டும். மேலும், இத்தகைய முகாமைத்து தகவல்கள் காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வில் நிதியியல் நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் போதியளவான தன்மைக் குறித்து பணிப்பாளர் சபைக்கு கலந்துரையாடுவதற்கு, மதிப்பீடு செய்வதற்கு மற்றும் தீர்மானங்களை எடுப்பதற்கான அம்முகாமைத்துவ தகவல்கள் போதியளவு அனைத்தையுமுள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

### 5.1.2 காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளின் செயற்றிறன் வாய்ந்த முகாமைத்துவத்திற்கான கோட்பாடுகள்

2022 யூன் 15 அன்று, காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வின் செயற்றிறன்வாய்ந்த முகாமைத்துவத்தில் வங்கிகளை வழிகாட்டுவதற்கு 12 கோட்பாடுகளை வங்கித்தொழில் மேற்பார்வை மீது பாசல் குழுக்கள் வெளியிட்டது. சிறந்த நடைமுறைகளாக இக்கோட்பாடுகள் காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்கான அணுகுமுறைகளைத் தாபிப்பதில் இலங்கையின் நிதியியல் நிறுவனங்களுக்கு சில நுண்ணறிதல்களை வழங்கலாம். இக்கோட்பாடுகளின் தொகுப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**கோட்பாடு 1:** வங்கிகள் தமது வியாபாரங்கள் மற்றும் அவை செயல்படும் சூழலில் ஏற்படக்கூடிய காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வு தூண்டல் காரணிகளில் ஏற்படும் சாத்தியமான பாதிப்புக்களை அறிந்து மதிப்பீடு செய்வதற்கான ஆற்றல்வாய்ந்த செயன்முறையொன்றை வங்கிகள் உருவாக்கி நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**கோட்பாடு 2:** சபையும் மூத்த முகாமைத்துவமும் உறுப்பினர்களுக்கும் அத்துடன்/அல்லது குழுக்களுக்கும் காலநிலையுடன் தொடர்புடைய பொறுப்புக்களை தெளிவாக குறித்தொதுக்குதல் வேண்டும் என்பதுடன் காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை செயற்றிறன்மிக்க வகையில் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

**கோட்பாடு 3:** காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளின் செயற்றிறன்வாய்ந்த முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற பொருத்தமான கொள்கைகள், நடைமுறைகள், மற்றும் கட்டுப்பாடுகளை வங்கிகள் ஒட்டுமொத்த நிறுவனத்திலும் செயற்படுத்துதல் வேண்டும்.

**கோட்பாடு 4:** முக்கிய காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை ஆற்றல் வாய்ந்த, அனைத்தையுமுள்ளடக்கிய, மற்றும் செயற்றிறன்வாய்ந்த, அடையாளப்படுத்தல், அளவிடுதல் மற்றும் தணித்தல் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கு மூன்று நிலை பாதுகாப்பு முழுவதும் வங்கிகள் தமது உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்புக்களினுள் காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை ஒருங்கிணைத்தல் வேண்டும்.

**கோட்பாட்டு 5:** வங்கிகள் காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை இனங்கண்டு அவற்றின் பொருத்தமான அழுத்தப் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக வங்கிகளின் உள்ளக மூலதன மற்றும் திரவத்தன்மை போதுமை மதிப்பீட்டு செயன்முறையினுள் தொடர்புடைய கால எல்லைகளின் முக்கிய விடயமாக மதிப்பிடப்பட்டவற்றை ஒருங்கிணைத்தல் வேண்டும்.

**கோட்பாடு 6:** வங்கிகள் அவற்றின் மூலதன வளங்கள் மற்றும் திரவத்தன்மை நிலைமைகள் உள்ளடங்கலாக அவற்றின் நிதியியல் நிலைமைகளை முக்கியமான சேதமிழக்கச்செய்யக்கூடிய அனைத்து காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை இனங்கண்டு, கண்காணித்து, மற்றும் முகாமைசெய்தல் வேண்டும். வங்கிகள் நிதியியல் இடர்நேர்வுகளை இனங்கண்டு, அளவிட்டு, கண்காணித்து மற்றும் முகாமைசெய்வதற்கான நம்பகமான அணுகுமுறையொன்றை வெளிப்படுத்தி தாபிக்கின்ற அனைத்து முக்கிய காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளையும் வங்கிகளின் இடர்நேர்வு ஏற்பு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்புகள் பரிசீலனை செய்கின்றன என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**கோட்பாடு 7:** இடர்நேர்வு தரவு ஒருங்கிணைப்பு ஆற்றல்கள் மற்றும் உள்ளக இடர்நேர்வு அறிக்கையிடல் நடைமுறைகள் காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளுக்கு வகைகூறுதல் வேண்டும்.

**கோட்பாடு 8:** வங்கிகள் அவற்றின் கொடுகடன் இடர்நேர்வு தோற்றப்பாடுகள் மீது காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வு தூண்டல் காரணிகளின் தாக்கத்தை அறிந்துகொண்டு கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் செயன்முறைகள் முக்கிய காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை பரிசீலனை செய்கின்றன என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

**கோட்பாடு 9:** வங்கிகள் அவற்றின் சந்தை இடர்நேர்வு நிலைமைகள் மீது காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வு தூண்டல் காரணிகளின் தாக்கத்தை அறிந்துகொண்டு சந்தை இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் செயன்முறைகள் முக்கிய காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை பரிசீலனை செய்கின்றன என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

**கோட்பாடு 10:** வங்கிகள் அவற்றின் திரவத்தன்மை இடர்நேர்வு தோற்றப்பாடுகள் மீது காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வு தூண்டல் காரணிகளின் தாக்கத்தை அறிந்துகொண்டு திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் செயன்முறைகள் முக்கிய காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை பரிசீலனைசெய்கின்றன என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

**கோட்பாடு 11:** வங்கிகள் அவற்றின் தொழிற்பாட்டு இடர்நேர்வு தோற்றப்பாடுகள் மீது காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வு தூண்டல் காரணிகளின் தாக்கத்தை அறிந்து கொண்டு இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் செயன்முறைகள் முக்கிய காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை பரிசீலனைசெய்கின்றன என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

**கோட்பாடு 12:** பொருத்தமானவிடத்து, வங்கிகள் நம்பகமானசபை, அங்கீகரித்த இடர்நேர்வு ஏற்பு, குழுக் கட்டமைப்புக்கள், காலநிலையுடன் தொடர்புடைய பாதைகளுக்கானமற்றும் கணியம்சார் மற்றும் பண்புசார் வழிமுறைகளைப் எல்லையொன்றுக்கும் தமது வியாபார முறைகளினதும்பயன்படுத்துவதன் மூலம் அனைத்து மூன்று நிலை உபாயங்களினதும் தாக்குப்பிடிக்கும் தன்மையை மதிப்பீடுபாதுகாப்புக்களிலும் இத்தகைய இடர்நேர்வுகளை செய்து அவற்றின் ஒட்டுமொத்த இடர்நேர்வு தோற்றப்பாடுஒருங்கிணைத்து, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் மீது காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வு தூண்டல்நிதியியல் இடர்நேர்வினை முகாமைசெய்வதற்கு மூலோபாய காரணிகளின் தாக்கத்தை தீர்மானிப்பதற்கு சூழ்நிலைப்அணுகுமுறையொன்றை தாபித்தல் வேண்டும். இவ்வாறான பகுப்பாய்வினை வங்கிகள் பயன்படுத்துதல் வேண்டும்.

## 6. முடிவுரை

இறுதியாக, காலநிலை மாற்றமானது ஒட்டுமொத்தமாக நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நிதியியல் முறைமை மீது முக்கிய நிதியியல் இடர்நேர்வுகளை விதிக்கின்றது. பல நுண்பாகபொருளாதார மற்றும் பேரண்டபொருளாதார ஊடுகடத்தல் வழிகள் பௌதீக (கடுமையான மற்றும் நீடித்த) மற்றும் மாறுதலடையும் இடர்நேர்வு தூண்டல் காரணிகள் ஆகிய இரண்டையும் காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளாக மாறுதலடையச் செய்கின்றன. இது வழமையாக கொடுகடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளாக வெளிப்படுகின்றன. மறுபுறத்தில், நிதியியல் நிறுவனங்கள் பெரும்பாலும் மாற்றத்துடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை வழக்கமான இடர்நேர்வு வகைகளான கொடுகடன், திரவத்தன்மை, சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் போன்றவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

பௌதீக மற்றும் மாறுதலடையும் இடர்நேர்வுகள் வெவ்வேறாக பிரிக்கப்பட்டபோதிலும் கூட, காலநிலை மாற்றத்திற்கான வலுவான மற்றும் உடனடி பதிலிறுப்பு பௌதீக இடர்நேர்வுகளை குறைக்கும் அதேவேளை மாறுதலடையும் இடர்நேர்வுகளை அதிகரிக்கும் என்பதால் இவை இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ளது.

இதற்கு முரணாக, காலநிலை மாற்றத்தைத் தணிப்பதற்கான படிப்படியான நடவடிக்கைகள் மாறுதலடையும் இடர்நேர்வுகளை அவசியமாக நீக்காமல், பௌதீக இடர்நேர்வுகளை அதிகரிக்கும். ஆகையினால், நிதியியல் நிறுவனங்கள் தமது வியாபார உபாயங்கள், ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்புக்கள், பணிப்பாளர்

நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, நிதியியல் நிறுவனங்கள் முன்னணி சிறந்த நடைமுறைகளை அளவிடும் அதேவேளை அவற்றுக்கு ஏற்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பின்பற்றலாம்.

## உசாத்துணைகள்


1. Bank of England Prudential Regulatory Authority (PRA), (2019) *Enhancing banks' and insurers' approaches to managing the inancial risks from climate change, Supervisory Statement | SS3/19.* London EC2R 6DA: Bank of England.
2. Basel Committee on Banking Supervision, (2020). *Climate-related financial fisks: a survey on current initiatives. Bank for International Settlements.*
3. Basel Committee on Banking Supervision (2021). *Climate related risk drivers and their transmission channels. Bank for International Settlemet.*
4. Capasso, G., Gianfrate, G., & Spinell, M. (2020). Climate change and credit risk. *Journal of Cleaner Production, Volume 266.*
5. Central Bank of Sri Lanka (CBSL) (2019). *Roadmap for sustainable finance in Sri Lanka.*
6. Central Bank of Sri Lanka (2022). *Sri Lanka Green Finance Taxomony.*
7. Ozili, P. K. (2020). Effect of climate change on financial institutions and the financial system. *Finance, Insurance and Risk Management Theory and Practices.*
8. Roncoroni, A., Battiston, S., & Escob, L. O. (2021). Climate risk and financial stability in the network of banks and investment funds. *Journal of Financial Stability, Volume 54.*



# பாரியளவிலான நிதியியல் நெருக்கடிக்கான பொறுப்பை ஏற்பது யார்?

## ஐக்கிய இராச்சிய வங்கியை மீட்டெடுத்தல் தொடர்பான விசேட வலியுறுத்துகையை நோக்கி

பீ. ஆர். எம். என். மெண்டிஸ்
துணைப் பணிப்பாளர்
வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

### 1. அறிமுகம்

உலகைத் திணறச்செய்த பாரியளவிலான நிதியியல் நெருக்கடியே முதலாவது உலகப் போரிற்குப் பின்னர் அறிக்கையிடப்படும் மிக முக்கியமான பொருளாதாரச் சரிவுகளிலொன்றாகும். இந்நெருக்கடியானது 2007இல் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள துணைமுதன்மை ஈட்டுச் சந்தையில் தூண்டப்பட்டதுடன் அதனைத்தொடர்ந்து ஏனைய நாடுகள் முழுவதும் பரவியது. 2007 செத்தெம்பரில், ஐக்கிய இராச்சியமானது வைப்பாளர்கள் ஒரே தடவையில் வைப்புக்களை மீள எடுக்க வங்கிக்கு வெளியே திரள்கின்ற முதலாவது நெருக்கடியை அனுபவித்ததுடன் நொர்தேன் றொக் வங்கிக் கிளைகளுக்கு வெளியே நீண்ட வரிசையில் வைப்பாளர்கள் காத்திருப்பதைத் தோற்றுவித்தது (Davis, 2010). இவ்வரிசையில், ஏறத்தாழ நான்கில் ஒன்று ஐக்கிய இராச்சியத்தின் மொத்த துணை முதன்மை ஈட்டு நிறுவனங்கள் காத்திருந்தன. நொர்தேன் றொக் வங்கியின் முதன்மை நிதியீட்டு மூலம் பாதுகாப்பாகும், எனவே, ஐக்கிய அமெரிக்காவின் துணை முதன்மை சந்தை முறிவுற்றதன் விளைவாக ஐக்கிய இராச்சிய சந்தையின் பாதுகாப்பு துவண்டு போனதும் வங்கி அதன் திரவத்தன்மை நிலைமையைப் பாதுகாப்பதற்கு போராடியது.

பாரியளவிலான நிதியியல் நெருக்கடியின் காரணமாக ஐக்கிய இராச்சியத்தின் முதலாவது வங்கி மீட்டெடுப்பிற்கு அழைப்பதன் மூலம் ஐக்கிய இராச்சிய அரசாங்கமானது நொர்தேன் றொக் வங்கியை தேசியமயமாக்குவதன் வாயிலாக இவ்விடயத்தில் தலையிடவேண்டியிருந்தது. மேலும், ஐக்கிய இராச்சிய அரசாங்கமானது றோயல் பாங் ஒப் ஸ்கொட்லான்ட் மற்றும் ஹலிபக்ஸ் பாங்க் ஒப் ஸ்கோட்லான்ட் உள்ளடங்கலான வேறு ஏனைய வங்கிகளை மீட்டெடுத்து பல்வேறு திரவத்தன்மை ஆதரவுத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. வங்கித்தொழில் நியம அறிக்கை (2013, ப,82) தொடர்பில் பாராளுமன்றக் குழுவில் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களுக்கமைவாக, *'பாரியளவிலான நிதியியல் நெருக்கடியான காலப்பகுதியில், வங்கி மீட்டெடுத்தலுக்காகச் செலவிட்ட மொத்தப் பணம், £133 பில்லியனாகும். இது, ஐக்கிய இராச்சியத்தில் ஆளொருவருக்கு £2,000 இற்குச் சமமானதாகும்'*. நெருக்கடியின் காரணமாக ஐக்கிய இராச்சிய வரி செலுத்துநர்களுக்கு இழப்புக்கள் ஏற்பட்டமையால் வங்கிகளை மீட்டெடுத்தல் எவ்வளவு முக்கியமானதென்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

### 2. பாரியளவிலான நிதியியல் நெருக்கடிகளுக்கான காரணங்கள்

மாபெரும் பொருளியலாளர்களில் ஒருவரான ஹைமன் மின்ஸ்கி என்பவர் இத்தகைய நிலைமைய அவருடைய கருத்திற்கமைய 'மின்ஸ்கி தருணம்' என எண்ணியமையால் பாரியளவிலான நிதியியல் நெருக்கடி மின்ஸ்கி நெருக்கடி எனவும் அழைக்கப்பட்டது. இவரது சாபக்கேடுமிக்க ஊகத்தின் காரணமாக நிதியியல்

முறைமையின் பாதிக்கப்படும் தன்மையை இவர் கலந்துரையாடினார். இவருடைய கருத்திற்கேற்ப, வலுவான பொருளாதாரமானது அளவுக்கதிகமான ஊகத்தினதும் மிகையான இடர்நேர்வை எதிர்நோக்குவதினதும் விளைவாக நிலையற்ற பொருளாதாரமாக மாற்றமடையலாம். நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் வினைத்திறனற்றதும் மென்மையானதுமான அணுகுமுறையின் காரணமாக ஊகிக்கத்தக்க கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் உயர்வான இடர்நேர்வை எதிர்நோக்குவதை ஊக்குவிப்பதே பாரியளவிலான நிதியியல் நெருக்கடிக்கு பின்னர் காணப்படும் முக்கிய காரணமாகும். பின்னர், 2008 நவெம்பரில் லண்டன் பொருளியல் பாடசாலைக்குச் சமூகமளித்த காலப்பகுதியில், *'இதை ஏன் யாரும் பார்க்கவில்லை?'* என ராணி கேட்டார். நெருக்கடி எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும் இதனைத் தவிர்த்திருக்கலாம் அல்லது புறக்கணித்திருக்கலாம் என அநேகமான நிதியியல் வழக்கறிஞர்கள் கருதினர்.

1980இல் நிதியியல் சந்தைகளின் கட்டுப்பாட்டை நீக்குவதுடன் இணைந்து, வங்கியின் கவனம் வைப்பாளர்களின் ஆர்வத்தை பாதுகாப்பதிலிருந்து பங்குதாரர்களின் செல்வத்தை அதிகரிப்பதை நோக்கி நகர்ந்தது (Mullineux, 2011). ஆகவே முல்லினக்ஸினால் எடுத்துரைக்கப்பட்டவாறு, வங்கிகளின் உபாயங்களானது, இழப்பு ஏற்படுத்துகையை நிறுத்துதல் அல்லது குறைவான இலாபத்தைக் கொண்ட கிளைகள் மற்றும் மிகையான இடர்நேர்வுகளை எதிர்நோக்குதல் என்பவற்றில் கவனஞ்செலுத்துகின்றது. வங்கிகள் சில்லறையை விட மொத்த விற்பனை வைப்புக்களில் தங்கியிருக்க ஆரம்பித்தது. இது, வங்கியின் பயனீட்டையும் குறைந்த மட்டத்திலான திரவச் சொத்துக்களையும் பரந்தளவில் அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. வங்கிகள் எதிர்பாராத திரவத்தன்மை தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு ஏதேனும் சுய காப்புறுதியைக் கொண்டிருக்காமையினால் இது வங்கிகளை கணிசமான இடர்நேர்வுகளுக்குள்ளாக்கியது. எனவே, இடர்நேர்வு முகாமைத்துவ பொறிமுறைகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி மற்றும் வங்கிகளின் கூட்டாண்மை ஆளுகைக் கட்டமைப்பு, ஊகிக்கத்தக்க வர்த்தகம், துரிதமான ஆனால் விவேகமான வளர்ச்சி என்பவற்றில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சிகளின் விளைவே பாரியளவிலான நிதியியல் நெருக்கடியாக காணப்பட்டது. திரவத்தன்மை பிரச்சினைக்கு நெருக்கடி காரணமாகவிருந்த அதேவேளை, வங்கிகளின் கடன்தீராற்றலின் துல்லியமற்ற மதிப்பீடே உண்மையான நிலவரமாக காணப்பட்டது.

### 3. பாரியளவிலான நிதியியல் நெருக்கடியான காலப்பகுதியில் வங்கியை மீட்டெடுப்பதற்கான பொறுப்பை ஏற்கின்ற தரப்பினர்கள்

பாரியளவிலான நிதியியல் நெருக்கடியான காலப்பகுதியில் வங்கியை மீட்டெடுப்பதற்கான பொறுப்பை ஏற்கின்ற தரப்பினர்களாக பின்வருவோரை அடையாளம் காணலாம்

### 3.1 வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்

**அ) சிக்கல்வாய்ந்த நிதியியல் உற்பத்திகளும் திறன்குறைவான தீர்மானமெடுத்தலும்**

- ❖ ஒரு வங்கியால் நிதியீட்டப்படும் ஈடுகள் பின்னர் ஈட்டு பாதுகாப்பிற்கு பாரிய சந்தையொன்றை உருவாக்கும் முதலீட்டு வங்கிகளுக்கு ஒட்டுமொத்தமாக விற்கப்பட்டுள்ளன. இடர்நேர்வைப் பாதுகாப்பதற்காக முதலீட்டு வங்கிகள் இத்தகைய முதலீடுகளை நிதியியல் சாதனங்களின் ஏனைய வடிவங்களாக மீளமாற்றியமைத்தன. இது, வங்கிகளினாலும் ஏனைய நிதியியல் நிறுவனங்களாலும் பயன்படுத்தப்படுகின்ற நிதியியல் உற்பத்திகளில் தாக்கத்தைச்செலுத்தியது.
- ❖ இந்நடைமுறை நிதியியல் நிறுவனங்களுக்கு மத்தியில் மற்றுமொரு தரப்பினரில் தொடர்ச்சியான தாக்கத்தை (பரவிவரும் தாக்கம்) கொண்டுவருவதற்கு ஒரு தரப்பினரின் நடவடிக்கைகளில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் கணிசமான இணைப்பொன்றை உருவாக்கியது. இது ஏனைய நிதியியல் நிறுவனங்களில் காணப்படும் நிதியியல் பிரச்சினை தொடர்களுக்குக் காரணமான துணைமுதன்மைச் சந்தையின் சரிவினுடைய விளைவுகளுக்கு வழிவகுத்தது.
- ❖ மேலும், பேராசையின் காரணமாக பாதுகாப்பைக்கொண்ட ஊகிப்பிற்கு வங்கிகள் மேற்கொண்ட தீர்மானங்களின் விளைவாக வங்கிகளின் திரவத்தன்மைச் சொத்துக்களில் பற்றாக்குறை ஏற்பட்டன. இதனால், தமது தொழிலுக்கு நிதியீட்டுவதற்கு போதுமான திரவத்தன்மை கிடைக்கப்பெறாமையினால் அவை திரவத்தன்மை பிரச்சினையொன்றில் பாதிப்படைந்தன.

ஆகவே, வங்கிகளின் இத்தகைய சிக்கல்வாய்ந்த உற்பத்திகளும் விவேகமற்ற தீர்மானங்களும் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் அவதிப்பட வழிவகுத்ததுடன் மீட்டெடுத்தல் வழி மூலம் தம்மை பாதுகாப்பதற்கு அரசாங்கத்தின் ஆதரவை வேண்டிநின்றன.

**ஆ) இடர்நேர்வு முகாமைத்துவம், ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் ஊதியக் கட்டமைப்பில் ஏற்பட்ட தவறுகள்**

பாரியளவிலான நிதியியல் நெருக்கடியான காலப்பகுதியில் வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், ஆளுகைக் கட்டமைப்புகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், முகாமைத்துவ மேற்பார்வை, ஊதியக் கட்டமைப்புகள் என்பவற்றில் கணிசமான தவறுகள் அடையாளங்காணப்பட்டன. எனவே, கவனமின்மையால் இடம்பெற்றதெனக்கூறி முறிவடைந்த வங்கிகளின் பணிப்பாளர் சபை தப்பித்துவிடமுடியாது. வங்கிகளின் நிறைவேற்று அதிகாரிகள் மிகையான இடர்நேர்வுகளை எதிர்கொள்ளும் போது அவர்கள் மீது போதியளவில் செலுத்தப்படாத தமது மேற்பார்வையின் காரணமாக நிறைவேற்றல்லாப் பணிப்பாளர்களின் வகிபாகம் அதிகளவில் விமர்சிக்கப்பட்டது. தேர்ச்சியற்றதும் பொருத்தமல்லாததுமான திறன்களின் காரணமாகவும் அறிவின் காரணமாகவும் அநேகமான நிறைவேற்று அதிகாரிகளும் நிறைவேற்றல்லா பணிப்பாளர்களும் தவறாக தெரிவுசெய்யப்பட்டனர். பாரியளவிலான நிதியியல் நெருக்கடி தொடர்பில் இலக்கிய மீளாய்விலிருந்தான சில ஆதரங்கள் பின்வருமாறு:

❖ **லெஹ்மான் பிரதர்ஸ் சபையானது** மட்டுப்படுத்தப்பட்ட நிதியியல் நிபுணத்துவத்தையும் வங்கித்தொழில் துறையில் அனுபவத்தையும் கொண்ட தனிநபர்களை உள்ளடக்குகின்றது. லெஹ்மான் கம்பனியின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த சிக்கல்வாய்ந்த நிதியியல் உற்பத்திகளையும் இடர்நேர்வுகளையும் முற்றாக புரிந்துகொள்ளாதமைக்கு சில உறுப்பினர்கள் விமர்சிக்கப்பட்டனர் (நிதியியல் நெருக்கடி விசாரணை ஆணைக்குழு, 2011).

❖ அந்நேரத்தில் **றோயல் பாங்க் ஒப் ஸ்கொட்லான்டின் முதன்மை நிறைவேற்று அதிகாரியான பிரெட் குட்வின்,** தீவிரமான விரிவாக்க உபாயத்திற்கும் இடர்நேர்வு எதிர்கொள்ளலுக்கும் விமர்சனங்களை எதிர்கொண்டனர். நிறைவேற்றல்லாப் பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக சபையானது குட்வினது தீர்மானங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தவறியுள்ளதாகவும் இடர்நேர்வுகளை துல்லியமாக மதிப்பிடுவதற்கு அவசியமான நிபுணர்களை கொண்டிருக்கவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்பட்டனர் (Martin, 2013).

❖ **நொர்தென் றொக் வங்கியின் சபையானது** குறுங்கால நிதியிடல் மீதும் ஈட்டு பாதுகாப்பு மீதும் பாரியளவில் தங்கியிருந்த தமது தொழில் மாதிரியுடன் ஒருங்கிணைந்த இடர்நேர்வுகளை புரிந்துகொள்ளாமைக்காக விமர்சிக்கப்பட்டது. நிறைவேற்றல்லாப் பணிப்பாளர்கள் இடர்நேர்வுகளை காத்திரமாக மேற்பார்வை செய்வதற்கு அவசியமான நிபுணத்துவத்தை கொண்டிருக்காமையினால் குற்றஞ்சாட்டப்பட்டனர் (Bruni & Llewellyn 2009).

வேறுபட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுக்களைக் சில வங்கிகள் கொண்டிருந்த போதும், இடர்நேர்வுகளை முகாமைசெய்யும் போது பொருத்தமான விதந்துரைப்புக்களையும் வழிகாட்டலையும் மூத்த முகாமைத்துவத்திற்கு வழங்குவதற்கு அக்குழுக்கள் தவறியுள்ளன. டேவிஸ் எடுத்துரைத்ததற்கமைவாக (2010), வங்கிகளின் இடர்நேர்வுகளை விருத்திசெய்வதற்கு, அளவிடுவதற்கு மற்றும் தணிப்பதற்கான *'பணிப்பாளர் சபையின் இயலாற்றல் மற்றும் விருப்பமின்மை'* என்பன கடுமையான நிதியியல் நெருக்கடிக்கு வங்கிகளை வழிவகுக்கின்ற முக்கிய காரணிகளாக அடையாளங்காணப்பட்டுள்ளன.

வங்கிகள் மீதான ஏனைய முக்கிய விமர்சனமாக அவற்றின் இழப்பீட்டு கட்டமைப்புக்கள் காணப்பட்டன. வங்கிகளின் முக்கிய நிறைவேற்று அதிகாரிகளும் வாத்தகர்களும் குறுங்கால அடிப்படையில் இழப்பீட்டைப் பெற்றுக்கொண்டனர். இது, அவர்கள் தமது கவனத்தை குறுங்காலத்தில் அதிகளவான வருவாய்களை ஈட்டுகின்ற அதிக இடர்நேர்வுமிக்க கொடுக்கல்வாங்கல்களில் செலுத்துவதற்கு வழிவகுத்தது. வங்கிகள் தமது நிதிப் பயனீட்டிலும் இடர்நேர்வு வெளிப்படுத்துகையிலும் அதிகரிப்பை தோற்றுவித்தன. இதன்விளைவாக, நெருக்கடி ஏற்படும் போது, அத்தகைய அனைத்து இலாபங்களும் இழப்புக்களாக மாற்றப்பட்டன. இந்நேரத்தில், அனைத்து பிரதான நிறைவேற்று அதிகாரிகளும் வர்த்தகர்களும் விளைவுகளுடன் போராடுவதற்கு ஏற்கனவே தமது நிதியியல் வெகுமதிகளை பெற்றுக்கொண்டு பொருளாதாரத்தின்

பங்குதாரர்களையும் வரிசெலுத்துநர்களையும் விட்டு விலகிச்சென்றனர். அவ்வெகுமதிகள் நெருக்கடிக்குப் பின்னர் மீளப்பெற்றுக்கொள்ளப்படவில்லை அல்லது மீளச்செலுத்துவதற்குக் கேட்டுக்கொள்ளப்படவில்லை.

**இ) தார்மீக ரீதியான ஆபத்து**

'இறுதிக் கடன் ஈவோன்' தொடர்பில் வங்கிகளின் தார்மீக ரீதியான ஆபத்தானது நெருக்கடியை மோசமடையச் செய்தது. திறன்குறைவான தீர்மானங்களை அடிப்படையாகக்கொண்டு வங்கிகள் தமது தொழிலை நடாத்துவதுடன் வங்கிகளை பேரழிவற்கு இட்டுச்செல்லும் அதிகளவான இடர்நேர்வுகளை எதிர்கொண்டது. பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளின் காரணமாக வங்கிகள் எந்தவொரு முறிவிலிருந்தும் தம்மைப் பாதுகாத்திருக்கலாம். வங்கிகளை மீட்டெடுத்தல் மற்றும் தார்மீக ரீதியான ஆபத்து தொடர்பில் கிம் என்பவரால் (2013, pp1) மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது *'மீட்டெடுத்தல் தொடர்பில் அதிகளவிலான நம்பிக்கையைக் கொண்ட வங்கியொன்று விசேடமாக வங்குரோத்து நிலைமையை அண்மித்து வரும்போது அதிகளவிலான இடர்நேர்வுகளை எதிர்கொள்கின்றது'* என்பதையும் அடையாளங்கண்டுள்ளது.

**ஈ) இடைத்தொடர்புத்தன்மையும் சிக்கல்வாய்ந்த கட்டமைப்புகளும்**


மீட்டெடுப்புகளுக்கு வங்கிகளை பொறுப்பாக்குவதற்கான மற்றுமொரு காரணம் வேறுபட்ட நாடுகளிலுள்ள ஏனைய நிதியியல் நிறுவனங்களுடனான சிக்கல்வாய்ந்த கட்டமைப்புகளும் இடைத்தொடர்புத்தன்மையுமாகும். எனவே, பரவிவருகின்ற தாக்கத்தின் காரணமாக ஒரு நாட்டிலிலுள்ள வங்கியின் முறிவு மற்றுமொரு நாட்டிலிலுள்ள வங்கியொன்றில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். வங்கித்தொழில் நடவடிக்கைகள் மோசடி நிறைந்ததாகவும் தேவையற்றதாகவும் விவேகமற்றதாகவும் அமைந்திருந்த போதும் அரசாங்கங்கள் தமது நாட்டிலும் அதேபோன்று ஏனைய நாடுகளிலும் ஏற்படுகின்ற தாக்கத்தை தவிர்ப்பதற்கு அத்தகைய வங்கிகளை மீட்டெடுக்கவேண்டியிருந்தன.

**3.2 ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகள்**

ஐக்கிய இராச்சியத்திலுள்ள திறைசேரி, பாங் ஒப் இங்கிலாந்து மற்றும் நிதியியல் பணி அதிகாரசபை ஆகிய மூன்று ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கிடையிலும் திறன்குறைவான ஒருங்கிணைப்பு காணப்பட்டது (ஐக்கிய இராச்சியத்தின் முன்னால் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு). இதற்கு இத்தரப்பினர்களின் வகிபாகங்களுக்கிடையிலான அடிப்படை வேறுபாடுகள் காரணமாயமைந்தது. இது, ஒட்டுமொத்த நிதியியல் முறைமையையும் பாரியளவிலான இடர்நேர்விற்கு உள்ளாக்கியது. ஏனெனில், நெருக்கடியான காலப்பகுதியில் மூன்று அதிகாரசபைகளினாலும் வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன (Davis, 2010).

'றன் ஒப் த றொக்' என்ற அறிக்கைக்கமைவாக, இம்மூன்று முறைமைகளிலும் கணிசமான குறைபாடுகளும் முறிவுகளும் காணப்பட்டன. இவ்வறிக்கை ஏனைய இரு தரப்பினர்கள் மீதும் பொருத்தமான அதிகாரசபைக்கு தெளிவுபடுத்தத் தவறியுள்ள திறைசேரியின் கடமையையும்

**வரைபடம் 1: ஐக்கிய இராச்சிய வங்கிகளின் ஸ்ரேலிங் திரவத்தன்மை சொத்து விகிதம் மொத்த சொத்துக்களின் சதவீதமாக (அனைத்து நாணயங்கள்)**




மூலம்: பாங்க் ஒவ் இங்கிலாந்து

விமர்சிக்கின்றது. அவ்வறிக்கை, 1997இல் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களைத் தொடர்ந்து நிதியியல் முறைமையில் பாங்க் ஒவ் இங்கிலாந்தின் திறமையற்ற மேற்பார்வையையும் எடுத்துக்காட்டுகின்றது. வங்கித்தொழில் மேற்பார்வை தொடர்பான மற்றுமொரு அறிக்கையில், நிதியியல் சந்தைகளின் நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பில் பாங் ஒப் இங்கிலாந்து *'நிறுவன ரீதியில் குறித்துரைக்கப்பட்ட தகவல்களையும்'* *'ஆழமான புரிந்துணர்வையும்'* குறைவாகக் கொண்டிருந்ததென அடையாளங்காணப்பட்டது.

மேலும், 'த றன் ஒப் த றொக்' அறிக்கையானது நிதியியல் பிரச்சினைக்கு மத்தியிலும் வங்கிகள் தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு போதியளவு திரவத்தன்மையை கொண்டிருக்க வேண்டிய ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புகளின் முறிவுகளை அடையாளங்கண்டுள்ளது (Hauser, 2010). கடந்த சில தசாப்த காலமாக பிரித்தானிய வங்கிகளினால் வைத்திருக்கப்படும் திரவத்தன்மை சொத்து மட்டத்தில் ஏற்படும் மாற்றத்தை வரைபடம் 1 எடுத்துக்காட்டுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்டவாறு, திரவத்தன்மை அதிர்ச்சிகளுக்கெதிராக போதுமான தாங்கியிருப்புகளுடன் தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு வங்கிகள் விழித்தெழவேண்டிய தருணமாக இது காணப்பட்டது. வங்கிகளுக்குள் போதுமான திரவத்தன்மையைப் பேணுவதற்கு ஒழுங்குமுறைப்படுத்துநர் மற்றும் வங்கிகள் இருவரினாலும் குறைவான முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கின்றதென்பதை இது தெளிவாக நிரூபிக்கின்றது.

அதுமட்டுமன்றி, சுய மேற்பார்வை மீதும் சுய ஒழுங்குமுறைப்படுத்தல் மீதும் தங்கியிருப்பதற்கு வங்கிகளை ஊக்குவிப்பதே நெருக்கடிக்கு முன்னர் ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் முக்கிய நோக்காகக் காணப்பட்டது. இதன் பின்னாலுள்ள முக்கிய காரணம் யாதெனில் மீளஒழுங்குமுறைப்படுத்தலினூடாகவும் மீளமேற்பார்வை செய்தலினூடாகவும் அரசாங்க ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மூலம் வழங்கப்பட்ட *'உதவியும் ஒத்திசைவும்'* ஆகும் (Davis, 2010). ஆதரவு தேடும் குழுக்களிடமும் அரசியல்வாதிகளிடமுமிருந்தான தேவையற்ற தலையீடும் ஒழுங்குமுறைப்படுத்துநர்களை கனிவாகவிருக்கச் செய்தது. அவ்வாறு, ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புகள் வங்கிகளின் கடன்தீராற்றலுக்கு போதுமான மேற்பார்வையும் முறையான மதிப்பீட்டையும் கொண்டிருப்பதற்குத் தவறியுள்ளது. வங்கிக் கடன்வழங்கலிலும் ஏனைய தொடர்பான நடவடிக்கைகளிலும் காணப்படும் கொள்கைகளும் நடைமுறைகளும் இதற்கு காரணமாக அமைந்ததுடன் நெறிமுறையற்றதும் மோசடியானதுமான அதிகளவாக நடவடிக்கைகளை கொண்டு நடாத்துவதற்கான சந்தர்ப்பத்தை வங்கிகளுக்கு மேலும் வழங்கின.

### 3.3 கணக்காய்வாளர்கள்

முறிவடைந்த வங்கிகளுக்கு கணக்காய்வுகளை நடாத்திய கணக்காய்வு நிறுவனங்களும் பாரியளவிலான நிதியியல் நெருக்கடிக்குப் பொறுப்பாகவிருக்கும் மற்றுமொரு முக்கிய தரப்பினராக அடையாளங்காணப்பட்டனர். வங்கிகள் முறிவடைய முன்னர் நிதியியல் நிலைமையின் ஆற்றல்வாய்ந்ததன்மை மீது தமது தெளிவான கணக்காய்வு கருத்துக்களை மேற்கொண்டமை இதற்கு காரணமாயமைந்தது. உதாரணமாக, லெஹெமென் பிரதர்ஸின் கணக்காய்வாளர்கள் 2008 யூலையில் வங்கியின் காலாண்டு ரீதியான கணக்குகள் பற்றி தகைமையற்ற கருத்துக்களை வழங்கியதைத்தொடர்ந்து வங்கி இரு மாதங்களிற்குள் வங்குரோத்தை கோப்பிட்டது (Davis, 2010). இன்னல் வருவதற்கு முன்னர் கணக்காய்வாளர்கள் விழிப்பூட்டாமல் இருந்தமையினால் இது, கணக்காய்வாளர்களின் வகிபாகம் மீதான அடிப்படை கரிசனைகளை அதிகரித்தது.

அறிக்கையிடல் இழப்புக்களை தவிர்ப்பதற்காகவும் உண்மையான இடர்நேர்வுகளை மறைப்பதற்காகவும் வங்கிகளின் அநேகமான இடர்நேர்வு நடவடிக்கைகள் ஐந்தொகையில் உள்ளடக்கப்படாத விடயமாக பதிவுசெய்யப்பட்டுள்ளன. இது தொடர்பிலும் அதேபோன்று வங்கிகளின் அதிகளவான நிதிப் பயனீடு தொடர்பிலும் கணக்காய்வாளர்கள் தமது குரலை எழுப்புவதற்குத் தவறியுள்ளனர். இது, கணக்காய்வாளர்களின் சுயாதீனம் தொடர்பான கரிசனையிலும் வினைத்திறன் தொடர்பான கரிசனையிலும் அதிகரிப்பைத் தோற்றுவித்தது. இதற்கு மேலதிகமாக, ஐக்கிய இராச்சியத்தின் திறைசேரித் தெரிவுக் குழுவிற்கான விஞ்ஞாபனத்தினூடாக ஐக்கிய இராச்சியத்தின் மற்றுமொரு அதிகாரசபையானது பொருத்தமான நிபுணத்துவமிக்க திறனாய்வு முடிவை கணக்காய்வாளர்கள் வழங்கத் தவறியுள்ளமையினால் கணக்காய்வாளர்கள் மீது குற்றஞ்சாட்டியுள்ளனர் (Davis, 2010). கணக்காய்வாளர்கள் அவர்களின் உரிய கவனத்தை கடன் செலுத்தத்தவறுகின்ற கடன்பெறுநர்களின் இடர்நேர்வை நோக்கியும் வங்கிகளால்

பின்பற்றப்படும் விவேகமான செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் நோக்கியும் செலுத்தியிருக்கவேண்டும் என இச்சபை மேலும் வலியுறுத்தியது. இடர்நேர்வுகளை ஆரம்பத்திலேயே அடையாளங்காண்கின்ற இயலாற்றலை மட்டுப்படுத்துதலும் இந்நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான நிவாரண வழிமுறைகளை வழங்குதலும் இத்தவறுகைக்கு காரணமாயமைந்தன.

### 3.4 கொடுகடன் தரமிடல் முகவராண்மைகள்

நிறுவனங்களின் நம்பகத்தன்மையை பிரதிபலிக்கும் படுகடன் கடப்பாடுகளுக்கான தரமிடல்களை நிறுவனங்களுக்கு வழங்குவதே கொடுகடன் தரமிடல் முகவராண்மைகளின் முதன்மை நடவடிக்கையாகும். இத்தரமிடல்கள் படுகடன் விலைகள் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தின. பல ஆண்டுகளாக கொடுகடன் தரமிடல் முகவராண்மைகளின் முக்கிய தொழில் கூட்டாண்மை முறிகளுடன் தொடர்புபட்டதாகவிருந்தது. எவ்வாறாயினும், பாதுகாப்புச் சந்தையின் எழுச்சியுடன், சொத்து பிணையமளிக்கப்பட்ட பிணையங்களிற்கான தரமிடல்களை வழங்குவதற்கு கொடுகடன் தரமிடல் முகவராண்மைகளுக்கு அதிகளவான இலாபத்தை ஈட்டித்தரும் தொழிலாக இது உருவாகியது. கூட்டாண்மை முறிகளுக்கான தொழிலுடன் ஒப்பிடுகையில் இத்தொழிலில் கொடுகடன் தரமிடல் முகவராண்மைகள் பாரியளவில் நன்மையடைந்தன. மொனோலைன் காப்புறுதியுடன் இணைந்த பாதுகாப்புச் சொத்துப்பட்டியல்கள் அதிகளவில் தரமிடப்பட்டன (Davis, 2010). இதன் விளைவாக, வங்கிகளானது பிணையங்களின் கடன்செலுத்தத் தவறுகை தொடர்பான இடர்நேர்வுகளைப் பொருட்படுத்தாது அனைத்து சொத்து பிணையளிக்கப்பட்ட சொத்துப்பட்டியலுக்கும் மொனோலைன் காப்புறுதிகளை வழங்க ஆரம்பித்தது. இது சந்தையில் ‘AAA’ தரமிடமிடப்பட்ட பிணையங்களில் அதிகரிப்பொன்றை தோற்றுவித்தது.

மேலும், அதிகளவு தரமிடலை பெற்றுக்கொள்வதற்கு எவ்வாறு சொத்து பிணையமளிக்கப்பட்ட பிணையங்களை வங்கிகள் கட்டமைக்க வேண்டும் என்பது தொடர்பில் வங்கிகளுக்கான ஆலோசனை சேவையையும் கொடுகடன் தரமிடல் முகவராண்மைகள் வழங்கின. இவை, இச்சேவையை மிக உயர்வான கட்டணத்தில் வழங்கின. தரமிடல்களை வழங்கும் போது, சுயாதீனமான கொடுகடன் தரமிடல் முகவராண்மைகள் மீதான அடிப்படை கரிசனையையும் இது அதிகரித்தது. உள்நாட்டு விலைக் குமிழியுடன் இணைந்து, பாதுகாப்புச் சொத்துப்பட்டியலின் பெறுமதியானது ஏதுவான பிணையங்களின் கடன்செலுத்தத் தவறுகை விகித அதிகரிப்பை சரிவடையச்செய்ய ஆரம்பித்தது. இது கொடுகடன் தரமிடல் முகவராண்மைகளின் நடவடிக்கையை பாரியளவில் விமர்சிப்பதற்கு வழிவகுத்தது.

### 3.5 கணக்கீட்டாளர்களும் கணக்கீட்டு நியமங்களும்

வங்கி ஒழுங்குவிதிகளும் கணக்கீட்டு நியமங்களும் இரு வேறுபட்ட கண்ணோட்டங்களின் கீழ் உருவாக்கப்படுகின்றன. வங்கி ஒழுங்குவிதிகளானது வைப்பாளர்களின் ஆர்வத்தையும் ஒட்டுமொத்த முறைமையிலிருந்து நிதியியல் முறைமையையும் பாதுகாத்து, முன்மதியுடைய இடர்நேர்வு முகாமைத்துவ நடத்தைகளையும் ஆளுகைக் கட்டமைப்புகளையும் ஊக்குவிக்கின்றன. எவ்வாறாயினும், கணக்கீட்டு நியமங்களானது நிறுவனங்களின் நிதியியல் நிலைமையின் உண்மையான கண்ணோட்டத்தை பிரதிபலிப்பதற்கும் நிறுவனமொன்றின் செயலாற்றம் தொடர்பில் ஆர்வலருக்கு காலமுறையான, நம்பகத்தன்மையான மற்றும் போதுமான தகவல்களை வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. எனவே, இவ்விரு தரப்பினர்களின் குறிக்கோள்களுக்கிடையில் கரிசனைமிக்க வேறுபாடு காணப்படுகின்றது.

இவ்விரு தரப்பினர்களுக்கிடையிலான அடிப்படை வேறுபாடு பாரியளவிலான நிதியியல் நெருக்கடியான காலப்பகுதியில் விசேடமாக துணைமுதன்மை ஈட்டுச் சந்தை முறிவடைந்த காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டன. கணக்கீட்டு நியமங்களிற்கமைவாக, வங்கிகள் சந்தைப் பெறுமதியில் பாதுகாப்புச் சொத்துப்பட்டியலை பதிவுசெய்வதற்கு வேண்டப்படுகின்றன. இது, பாரியளவிலான திரவத்தன்மை பிரச்சினைகளை வங்கிகள் எதிர்நோக்கின்ற காலத்தில் இடம்பெற்றது. இது, கணக்கீட்டு நியமங்கள் மிகையான மூலதனங்களை வங்கிகள் வீணாக்கச் செய்கின்றது என விமர்சகர்களின் வாதாடுகையுடன் கணக்கீட்டு நியமங்களுக்கெதிராக நிதியியல் சந்தையில் கணிசமான மறுப்புகளுக்கு வழிவகுத்தது (Davis, 2010). சீர்மதிப்புப் பெறுமதி விதிகள் *‘நிதியியல் முறைமையில் நூறு பில்லியன் டொலர் கொண்ட மூலதனத்தை சிதைத்துள்ளன’* என பெடரல் வைப்புக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முன்னால் மூத்த அலுவலர்களின் ஒருவர் வாதிட்டார். எனவே, சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து எழுகின்ற பாரிய இழப்புகள் வங்கிகளின் மூலதனத்தை

சிதைவடையச்செய்தன. நிதியியல் சந்தையிலுள்ள நிபுணா்கள் சீா்மதிப்பு விதிகளை எதிா்த்துரைத்துடன் இவை திரவத்தன்மை பிரச்சினைகளை கடன்தீராற்றல் பிரச்சினைகளாக மாற்றியமைத்தன என பழிசுமத்தினா். இது, கடுமையான கடன்தீராற்றல் பிரச்சனைகளை எதிா்கொள்வதற்கு வங்கிகளை இழுத்துச்சென்றன.

### 3.6 ஊடகம்

தோற்றம்பெற்றுவரும் நிதியியல் இடா்பாடு தொடா்பான விழிப்பூட்டல் தமது குரலை எழுப்பவில்லை என ஐக்கிய இராச்சியத்தின் ஊடகமும் அதிகளவில் விமா்சிக்கப்பட்டனா். ஒழுங்குமுறைப்படுத்துநா்களைப் போன்று, ஊடகத்திற்கும் தமது குரலை உயா்த்துவதற்கு எந்தவொரு கட்டுப்பாடுகளும் இல்லை. எவ்வாறாயினும், அதிகாரிகளை விழிப்பூட்டச் செய்வதற்கான குரலை அவா்கள் சரியான நேரத்தில் எழுப்பவில்லை. ஒழுங்குமுறைப்படுத்துநா்களை போன்று ஊடகங்களும் தமது கடமையைச் செய்யத் தவறியுள்ளனா் என அரசியல்வாதிகள் ஊடகங்களை நோக்கிச் சுட்டிக்காட்டினா். வங்கிகளின் நிதியியல் சாதனங்களின் கட்டமைப்பையும் சிக்கல்வாய்ந்ததன்மையையும் புரிந்துகொள்வதற்கு தாங்கள் தவறியுள்ளன என்பதே ஊடகத்தினால் வழங்கப்பட்ட நியாயாதிக்கமாகும். ஊடகவியலாளா்கள் தாங்கள் உதவிசெய்யாததை புரியவைக்க முயற்சித்த போதும், வங்கிகள் அதிகளவிலான இடா்நோ்வை எதிா்கொள்வதன் மூலமும் நிதிப் பயனீட்டின் மூலமும் வியக்கத்தக்க வகையில் வளா்ச்சியடைய ஆரம்பித்தமையால் வங்கிகளின் நடவடிக்கைகள் தொடா்பில் ஊடகவியலாளா்கள் சற்று விழிப்பாகவிருந்திருக்கலாம். அவா்கள் ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புகளுக்கிடையிலான முரண்பாட்டை அறிந்திருந்தனா் என்பதுடன் வங்கிகளினால் நடாத்தப்படும் நியாயமற்றதும் தேவையற்றதுமான நடத்தைகளையும் கண்டுகொண்டதோடு வங்கிகளின் நியாயமற்ற இழப்பீட்டு கட்டமைப்புகள் தொடா்பிலும் விழிப்பூட்டப்பனா்.

### 3.7 துணைமுதன்மை கடன்பெறுநா்கள்

கடன்பெறுநா்கள் ஈட்டுத் தரகா்களினால் தவறாக வழிநடாத்தப்பட்ட போதும், அவா்கள் தமது தேவையற்ற கடன்பெறுகைகளினூடாக தம்மையும் வங்கிகளையும் பாரியளவிலான இடா்நோ்விற்கு உள்ளாக்கினா். ஈட்டுக் கடன்கள் வழங்கப்பட்ட கடன்பெறுநா்கள், கடன்பெறத்தகுதியற்றதாக காணப்பட்டனா் (Davis, 2010). அநேகமான இக்கடன்கள் (நிஞ்சாக் கடன்கள்), *'வருமானமின்மை, சொத்துக்களின்மை மற்றும் வேலையின்மை'* கொண்ட மக்களுடன் பகிா்ந்தளிக்கப்பட்டன. தமது கடன்களை மீளச் செலுத்துவதற்கு அத்தகைய கடன்பாட்டாளா்களுக்கு வருமானத் துறை காணப்படவில்லை. அவா்கள் தவறவிடப்பட்ட கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு அதே ஆதனத்தை மீண்டும் மீண்டும் ஈடுசெய்வதன் மூலம் கடன்களைப்பெற்றனா். இது, அவா்களின் ஆதனங்களின் பெறுமதியை விஞ்சுகின்ற கடன்களைப் பெற்றுக்கொள்ளத் தோற்றுவித்தது. இது, கடன்பெறும் போது, நிதியியல் ஒழுங்கை எடுத்துக்காட்டத் தவறியதன் காரணமாக அமைந்தது. அத்தகைய நடவடிக்கைகள் வங்கிகளுக்கு அதிகளவான கடன்களை வழங்குவதற்கு வழிவகுத்ததுடன் பல்வேறு பிணையமளிக்கப்பட்ட சொத்துப்பட்டியலில் அதே ஆதனத்தைக் கொண்டுள்ளது.

### 4. முடிவுரை

நிதியியல் மீளஒழுங்குமுறைப்படுத்தலானது துரிதமாக மென்மேலும் வளா்ச்சியடைவதற்கு வங்கிகளுக்கான பாதையை மிதமடையச்செய்தது. தாா்மீக ரீதியான ஆபத்துடன் இணைந்த அத்துரிதமான வளா்ச்சியானது உயா்வான நிதிப் பயனீடு, ஊகம் மற்றும் கடுமையான உற்பத்திகள் என்பவற்றுடன் இணைந்து தளா்வடைந்த திரவத்தன்மை நிலைமைகளை வங்கிகள் கொண்டிருப்பதற்கு வழிவகுத்தது. வங்கிகளினாலும் ஒழுங்குமுறைப்படுத்துநா்களினாலும் மேற்கொள்ளப்படும் இக்கரிசனைகளின் புரிந்துணா்வு மட்டுப்படுத்தப்பட்டது. இருப்பினும், வங்கிகள் கொள்கைகளிடமிருந்தும் நடைமுறைகளிடமிருந்தும் கணிசமானளவில் விலகியதுடன் திறன்குறைவான மேற்பாா்வையை வழங்கி, இடா்நோ்வு முகாமைத்துவ நடத்தைகளில் குறிப்பிடத்தக்களவில் முறிவடைந்தது. இது, வங்கிகளை நிதியியல் இடா்பாடுகளால் அதிகளவில் பாதிப்படையச்செய்து நிதியியல் நிலைமைகளை நலிவடையச்செய்தன. முதலீட்டு வங்கித்தொழிலை அழைப்பதன் மூலம் ஏனைய ஊகமிக்க கொடுக்கல்வாங்கல்களின் வங்கிகளை பாதுகாப்பதற்கு ஐக்கிய அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட வொல்கா் விதியைப் போன்று புதிய விதிகளை கொண்டுவருவதற்கு இவை காரணமாகின.

ஒழுங்குமுறைப்படுத்துநா்கள் அவா்களின் மேற்பாா்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வகிபாகத்தை நடாத்துவதில்

மட்டுமல்லாமல் திரவத்தன்மை தேவைப்பாடுகள், மூலதனப் போதுமாந்தன்மை என்பவற்றை வலுப்படுத்துகின்றனர். எவ்வாறாயினும், இது ஒழுங்குமுறைப்படுத்துநரின் தவறுகையினால் மாத்திரமல்லாமல் அரசாங்கத்திடமிருந்தும் சுய ஒழுங்குபடுத்தலையும் சுய மேற்பார்வையையும் வலியுறுத்துகின்ற ஆதரவு தேடும் குழுக்களிடமிருந்தும் வங்கிகளால் பெறப்படும் ஆதரவினாலும் ஏற்பட்டதாகும். இத்தகைய கணக்காய்வாளர்களிற்கு மேலதிகமாக, கொடுகடன் தரமிடல் முகவராண்மைகள், ஊடகம், கணக்கீட்டாளர்கள் மற்றும் கடன்பெறுநர்கள் ஆகியோர் பாரியளவிலான நிதியியல் நெருக்கடிக்கும் வங்கிகளின் மீட்டெடுப்புக்கும் பொறுப்பாகக் காணப்பட்டனர்.

இதற்கமைய, பாரியளவிலான நிதியியல் நெருக்கடியானது அனைத்து இத்தகைய தரப்பினர்களுக்கும் பாரியளவிலான படிப்பினையை விட்டுச் சென்றது. எவ்வாறாயினும், வங்கி மீட்டெடுப்புக்களின் செலவை பொறுப்பேற்க வேண்டிய வரி செலுத்துநர்களின் கிரயத்திலிருந்து இப்படிப்பினை கற்றறியப்பட்டது. எனவே, அரசாங்கம் நிதியியல் சந்தைக்கு ஒருபோதும் ஏற்படுத்தாத இடர்நேர்வுகளை விட நிதியியல் சந்தைகளின் விசேடமாக வங்கிகளின் நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கும் வரிசெலுத்துநர்களுக்கும் பாரியளவிலான இடர்நேர்வொன்றை உருவாக்கலாம் என்பது தெளிவாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

### 5. உசாத்துணைகள்


- Black, J., (2010), Managing the financial crisis – the constitutional dimension: Law Society and Economy working papers, 12/2012, London School of Economics and Political Science.
- Bruni, F., & Llewellyn, D. T., (2009), The Failure of Northern Rock: A Multi-Dimensional Case Study. SUERF – The European Money and Finance Forum.
- Culpeper, P.D., & Runke, R., (2014), Structural power and bank bail-outs in the United Kingdom and the United States, Politics and Society, Volume 42(4): Sage Publications, pp 427-457.
- Davis, H., (2010), The Financial Crisis: Who is to Blame?: Polity Press
- Financial Crisis Inquiry Commission, (2011), The Financial Crisis Inquiry Report: Final Report of the National Commission on the Causes of the Financial and Economic Crisis in the United States. Retrieved from https://fcic-static.law.stanford.edu/cdn_media/fcic-reports/fcic_final_report_full.pdf
- Hauser, A., (2010), Lender of last report operations during the financial crisis: seven practical lessons from the United Kingdom; BIS Paper No. 79, pp 81-92.
- House of Commons Treasury Committee, (2008), The run on the rock, Fifth report of session 2007-08, Volume I, report together with formal minutes.
- House of Commons Treasury Committee, (2008), The run on the rock, Fifth report of session 2007-08, Volume I, Oral and written evidence.
- House of Commons Treasury Committee, (2009), Banking crisis: dealing with the failure of the UK banks, Seventh report of the session 2008-09, Report together with formal minutes.
- Kim, Y., (2013), Bank bail-outs & Moral Hazard? - Evidence from bank's investment and Financing decisions: William E. Simon Graduate school of Business, University of Rochester.
- Martin, I., (2013), Making it Happen: Fred Goodwin, RBS and the Men Who Blew Up the British Economy. Simon & Schuster UK.
- Morrison, A.D., (2011), Systemic risks and the 'too big to fail' problem: Oxford Review of Economic Policy, Volume 27, 03.11.2011, pp 498-516.
- Mullineux, A., (2011), Briefing Paper: public duties and social responsibilities of British Banks: Centre on Household Assets and Savings Management.
- Nao.org.uk (2016), Available on https://www.nao.org.uk/highlights/taxpayer- support-for-uk-banks-faqs/, [Accessed on 22.02.2016].
- Parliamentary Commission on Banking Standards (2013), Changing banking for good, first report of session 2013/14, Volume I, Summary, and conclusions, and recommendations.
- Parliamentary Commission on Banking Standards (2013), Changing banking for good, Volume II, Chapters 1 to 11 and Annexes together with formal minutes.
- Wray, L.R., (2012), Global Financial Crisis: A Minskyan Interpretation of the Causes, the Fed's Bail-out, and the Future: Working Paper No. 711, Levy Economics Institute of Bard College.
- Telegraph.co.uk (2016), Available on http://www.telegraph.co.uk/finance/newsbysector/banksandfinance/4285063/Bail-out-Britains-banks-A-timeline.html, [Accessed on 22.02.2016].